விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 பங்குனி 09 திங்கட்கிழமை (23.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 094

# புதிய அமைச்சர்கள் திடீரென பதவியேற்பு



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 26 பேர் அமைச்சர்களாகவும், இராஜாங்க அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் புதிதாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் தலைமையில் பீல்ட் மார்ஷலாக சரத் உயர்வு



(கொழும்பு)

முன்னாள் படைத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் பீல்ட் மார்ஷலாக தரம் உயர்த்தப்பட்டுள்ளார்.

படைத்துறை அமைச்சின் மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அரசாங்க பிரதிநிதிகள், அமைச்சர்கள், அதிகாரிகள், முப்படைகளின்

24ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் போனோர் கவனயீர்ப்பு இன்று

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடத்தப்பட்டு, காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் இன்று வடக்கு, கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களிலும் மிகப் பெரியளவிலான அமைதிவழி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணிக்கு

23ஆம் பக்கம் பார்க்க

## உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் செல்ல வடக்கு முதலமைச்சருக்கும் இராணுவம் அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இராணுவம் பிடித்து வைத்துள்ள உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் செல்வதற்கு வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் இராணுவ உயர் அதிகாரியுடன் முன்பு



23ஆம் பக்கம் பார்க்க

## அரசு ஒருகையால் கொடுத்து மறுகையால் எடுத்துக் கொள்கிறது

### வசாவிளான் காணி குறித்து விக்னேஸ்வரன் கருத்து



(யாழ்ப்பாணம்)

அரசாங்கம் எமக்கு அறிவித்தபடி காணிகளை விடுவிக்கமுடியாத நிலை உள்ளமையினால் இராணுவத்திற்கும் அரசிற்கும் இடையில்

23ஆம் பக்கம் பார்க்க

## இந்.மீனவர்கள் 54 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

கச்சத்தீவு - நெடுந்தீவுக்கு இடைப்பட்ட கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 54 பேர் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீனவர்களை நேற்று முன்தினம் இரவு சுமார் 8.30 மணியளவில் 10 படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் ஜய

24ஆம் பக்கம் பார்க்க

## தேசிய அரசுக்கு மகிந்த வாழ்த்து

(கொழும்பு)

தேசிய அரசாங்கத்திற்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று மாத்தறை தெலிஜ்ஜவில தஹாம் பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கு இலச்சினை அணிவிக்கும் நிகழ்வில் பங்கேற்ற போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நேரத்தில் நான் ஓய்வுபெற்றுக் கொள்கின்றேன். அரசியல் ரீதியான தீர்மானங்கள் எதனையும் எடுக்கப் போவதில்லை.

போர் இடம்பெற்ற காலத்தில் தேசிய அரசாங்கம் பற்றி பேசிய போது சிலர் கேலி செய்தனர். சிரித்தார்கள் ஆனால் இன்று நிறுவப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்திற்கு அவ்வாறான விமர்சனங்களை வெளியிடப்போவதில்லை.

தேசிய அரசாங்கத்திற்கு நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (செ)

## அடுத்த அதிகாரம் சபாநாயகருக்கே!

(கொழும்பு)

ஜனாதிபதி இல்லாத சந்தர்ப்பங்களில் அவரது கடமைகளை செய்வதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு வழங்கப்படவுள்ளது.

இதுவரை காலமாக ஜனாதிபதி இல்லாத சந்தர்ப்பங்களில் அவரது பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகாரம் பிரதமருக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 19ஆவது அரசியலமைப்பின் திருத்த சட்டத்தின் ஊடாக சபாநாயகருக்கு அவ்வதிகாரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி தனது பதவி காலத்தில் இருக்கும் போது உயிரி

23ஆம் பக்கம் பார்க்க

## ஒரு வாரத்துக்குள் தீர்வு-சீனா

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரத் திட்டப் பிரச்சினைகளுக்கு இன்னும் ஒரு வாரத்துக்குள் தீர்வு காணப்பட்டு விடும் என சீனாவின் மேற்குப் பிராந்திய திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ஓ ஜியாலி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 26ஆம் திகதி சீனாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலை

23ஆம் பக்கம் பார்க்க

## ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி பணி ஆற்ற வாய்ப்பு


### ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

பேதமின்றி பணியாற்ற சந்தர்ப்பம் கிட்டியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமை

23ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அகதி கொள்கை விவகாரத்தில் அவுஸ்திரேலியாவுக்கு சிக்கல்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் அகதிகள் கொள்கையின் நிமித்தம், அதற்கு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்புரிமையை வழங்கும் திட்டத்தை ஐக்கிய நாடுகள் மீளாய்வு செய்ய வேண்டும் என்று வலியுறுத தப்பட்டுள்ளது.

2018-ம் ஆண்டளவில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆசனம் அவுஸதிரேலியாவுக்கு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் இதற்கு அவுஸ்திரேலியா மனித உரிமைகள் சட்டமையம் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலியா மிகவும் மோசமான செயற்பாட்டை முன்னெடுக்கிறது.

இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகளினது சட்டத்திட்டங்களையும், சர்வதேச சட்டங்களையும் அவுஸ்திரேலியா மீறி வருகிறது.

இந்த நிலையில் அவுஸ்திரேலியாவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு வின ஆசனம் வழங்கப்படக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)


## பெண் லிகிதர் தேவை

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கும் ஒரு ஸ்தாபனத்திற்கு பெண் லிகிதர் தேவை (கல்வித்தகைமை க.பொ.த. சாதாரண தரம்) மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (C-437)

தொடர்புகளுக்கு : 021 222 7893





மங்கையர்க்கரசியின்
மனம் மகிழ் வாழ்த்துக்கள்

HAPPY BIRTH DAY WISHES ...

நூறாண்டு கண்ட
நல்லை மங்கையர்க்கரசி
ஐம்பதுகளிலிருந்து எண்பதுகள் வரை
ஆசிரியப்பணியாற்றி... இன்று தனது
90வது பிறந்தநாளை
கொண்டாடும் (C-440)

திருமதி
தங்கம்மா திருநாவுக்கரசு
அவர்களை
தானுள்ளவரை வாழ வாழ்த்துகிறாள்.

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம் – 2015.03.23


# பஸ் சாரதியின் வேகச் செலுத்துகையால் வெளியே வீசப்பட்ட இளம்தாய் படுகாயம்

(கொழும்பு)

கினிகத்தேனை கொத்தலென்ன பகுதியிலிருந்து ஹற்றன் வரை சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸில் பயணித்த 22 வயதுடைய தாய் ஒருவர் பஸ்ஸிலிருந்து வெளியே வீசப்பட்டு படுகாயங்களுடன் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

பஸ்ஸிலிருந்து இறங்குவதற்கு பெல்லை அடிக்க முயற்சி செய்த போது குறித்த தாய் வெளியே தூக்கி வீசப்பட்டுள்ளார்.

நேற்று 3.00 மணியளவில் இந்த விபத்து ஹற்றன்- கொழும்பு பிரதான வீதியில்வட்டவளை, ரொசல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர.

ரொசல்ல டெம்பள்ஸ்டோவ் பகுதியில் வசிக்கும் சிவாஜி கணேசன் விசித்திரகலா என்ற இந்த இளம்தாயே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

குறித்த தாய் வட்டவளை வைத்தியசாலையில் தனது குழந்தையை பிரசவித்து 16 தினங்களாகிய சிகிச்சையின் பின் நேற்று தனது தாயாரோடு வீட்டிற்கு செல்வதற்கு மேற்படி பஸ்ஸில் ஏறியதாகவும் குழந்தையை தனது தாய் கையில் கொடுத்துவிட்டு பஸ்ஸின் முன்னால் ஆசனத்தில் அமர்ந்து சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் ரொசல்ல பகுதியில் இறங்குவதற்கு பெல்லை அடிக்க முற்பட்ட போது குறித்த தாய் வெளியே வீசப்பட்டதாக விசாரணைகளை மேற்கொள்ளும் வட்டவளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



மேற்படி பஸ் வேகமாக சென்றதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பஸ் சாரதியை கைது செய்துள்ளதாகவும் வட்டவளை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேக நபரான சாரதிக்கு எதிராக ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவிக்கின்றனர். (செ)

# மருத்துவ அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு

மருத்துவர்களுக்கு கிடைக்க வேண்டிய வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள் முறையாக வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை நாடளாவிய ரீதியாக அடையாள பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளப்படவுள்ளதாக எச்சரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய அந்த சங்கத்தின் உதவி செயலாளர் நவிந்த டி சொய்சா, நாளை காலை 8.00 மணிதொடக்கம்மதியம் 12.00 வரை அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்தார். (செ)


# மன மகிழ்வுடன் வரவேற்கின்றோம்

யாழ் மாவட்ட அரச அதிபராக
பதவி ஏற்கவுள்ள அளவெட்டி மண்ணின் மைந்தன்
**திரு.நாகலிங்கம் வேதநாயகன் B.Sc., M.P.M**
**(இலங்கை நிர்வாக சேவை விசேடதரம்)**
அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.



அளவையின் மைந்தன் அருந்தவபுதல்வன்
அன்பின் உறைவிடம் அமைதியின் நிறைகுடம்
அணி செய்நற்குணம் அதன் முழு திருஉருவம்
யாழ் மண்ணில் அரச அதிபராய் அடிவைக்கும்
அற்புத நாளில் அவர்கரம் பற்றி அழைக்
கின்றோம் வாரீர்!

நாடிப்பணிசெய் நாயகன்வரவை காணக் காத்
திருந்தோம்
தேடிக்கிடைக்கா தேவனாய் தூரப்பணிபுரியப்
பார்த்திருந்தோம்
ஓடிக்களைத்து உறங்காது உழைத்துவளராமல்
வாடியிருந்தோம்
கூடிப்பணிபுரியகுனிந்தவர் தலைநிமிர்ந்து குறைகள்
களைய
வாடிய பயிருக்கு வான்மழையாய் வரும் நாயகன்
வருகவருகவே !

அளவெட்டி வாழ் மக்கள் சார்பாக
அளவெட்டி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம்
(9859)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசிற்கு அரசு அழைப்பு!



## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல விடுத்தார்

**(கொழும்பு)**

**தேசிய மற்றும் சர்வதேச சவால்களுக்கு முகங் கொடுப்பதற்கு சகலரதும் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அதற்காக தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இரண்டு பிரதான கட்சிகளும் முன்வர வேண்டும் எனவும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல வலியுறுத்தியுள்ளார்.**

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல இதனை கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் நாட்டின் எதிர்காலத்துக்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

நாட்டில் பிரதானமாக இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன.

ஒன்று தேசிய பிரச்சினை.

மற்றையது சர்வதேச சவால்.

இலங்கையின் பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

நீண்டகாலமாக தீர்க்கப்படாதுள்ள வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும், இதன் அடிப்படையிலேயே தீர்வு காணப்படப்பட வேண்டும்.

சர்வதேச சவால் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளதே தவிர, நிறைவடையவில்லை.

இதற்கும் ஒத்துழைப்பு அவசியம்.

இதற்கு தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதே சிறந்த வழி என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.

காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**

(சி-342)


# இடமாற்றங்களை இரத்து செய்யவும்

## ஜனாதிபதி ஆலோசனை

உடனடியாக அமுலுக்குவரும் வகையில் அனைத்து பொலிஸ் அதிகாரிகளினது இடமாற்றங்களையும் இரத்து செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆலோசனை வழங்கியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பொலிஸ் இடமாற்றங்கள் ஜனாதிபதி செயலாளர், பொது அமைதி தொடர்பான அமைச்சர் மற்றும் பொலிஸ்மா அதிபர் உள்ளடங்கலான மூவரடங்கிய குழுவினூடாக வழங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)


**காணி விற்பனைக்கு**


பருத்தித்துறை தும்பளை வீதியில் பன்னையம்பதியில் நிலப்பரப்பு 01 குளி 04 விஸ்தீரணமுடைய வீடு கட்டக் கூடிய காணி மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

**தொடர்புகளுக்கு:-0774366704**

(சி-429)


# நிறைவேற்று ஜனாதிபதி நாட்டிற்கு அவசியமில்லை

## ஹக்கீம் கூறுகிறார்



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நாட்டிற்கு அவசியமற்றது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

நிறைவேற்று பிரதமர் பதவியை, மையப்படுத்திய நிர்வாக முறைமை ஒன்று அவசியமாகவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)


# ஓராண்டு நினைவலைகள்



தோற்றம் 14.08.1938 — மறைவு 23.03.2014

**அமரர் கணபதிப்பிள்ளை செல்வராசா**

(ஐயனார் கோவிலடி, மல்லாகம்)

சென்ற ஆண்டு இதே திங்களில்
இதே திகதியில்
எங்கள் அதிகாலைக் கிழக்கு
அமாவாசையானது
மணி விளக்கு ஒளியிழக்க
இருள் கவிந்தது அப்பா, தாத்தா
என்றும் என்றென்றும்
நிலைத்திருக்கும் உங்கள் நினைவுகள்
பலித்திடும் உங்கள் கனவுகள்

(C-7928)

**தகவல்:**

ஐயனார் கோவிலடி, மல்லாகம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# இராசி பலன்

**23.03.2015**

(பங்குனி 09, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு
திருதியை முற்பகல் 9.54 மணிவரை
அச்சுவினி முற்பகல் 8.24 மணிவரை
இராகுகாலம் 7.46-9.16 மணிவரை
சுபநேரம் 12.16-1.46 மணிவரை
சக்தி கணபதி சதுர்த்தி விரதம்

**வளவன்**

**மேடம்:** திட்டமிட்ட காரியமொன்றில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வேலைச்சுமை கூடும், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.

**இடபம்:** எதிலும் வேகத்தை குறைத்து பொறுமையாக செயற்படுவது நல்லது, தேவையற்ற குறைகள் கேட்கும் வாய்ப்புண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், நண்பர்கள் மத்தியில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணத்தால் பலனுண்டு.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, சில கட்டுப்பாடுகள் ஏற்படலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், தொழிலில் மேலதிகாரிகளை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** உடன்பிறப்புகள் உங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வர், ஆரோக்கியமான நாள், காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், [illegible] ங்கள் [illegible]

**தனுசு:** எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், மாமன் மைத்துனர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்:** புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர் ஒருவர் உங்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லலாம்.

**கும்பம்:** பிடிவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது, உடன்பிறப்புகளின் குணத்தை அறிந்து நடந்து கொள்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.

**மீனம்:** பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், விவாதங்களை தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில் இரகசியம்

# உங்கள் ஊழியர்களை கட்டிப்பிடிக்கிறீர்களா?

அய்யோ, இவனுக்கு எப்படித் தெரிந்தது என்று பயப்படா தீர்கள். நாம் கேட்க வந்தது வேறு. போட்டி நிறைந்த விற்பனை உலகில் வாடிக்கையாளரைக் கட்டிப்பிடித்தால்தான் கல்லா கட்ட முடியும் என்பதை நடைமுறையில் பார்க்கிறோம்.

உங்கள் வாடிக்கையாளர்களைக் கட்டிப்பிடிக்கப் போகிற வர்கள் உங்கள் ஊழியர்கள். அவர்களை யார் கட்டிப் பிடிப்பது? அவர்களை யார் உண்மையுடன், உவகையுடன், உத்வேகத் துடன், உணர்ச்சிபூர்வமாக பணி புரிய வைப்பது?

சாட்சாத் முதலாளியான நீங்கள்தான் என்கிறார் 'ஜேக் மிட்சல்'. அமெரிக்காவில் 'மிட்சல்ஸ் ரிச்சர்ட்ஸ்' என்ற வெற்றி கரமான துணிக் கடைகளின் உரிமையாளர். வாடிக்கையாளரைக் கட்டிப்பிடிப்பது எப்படி என்று விளக்கியவர் 'Hug your people' என்ற தனது இரண்டாவது புத்தகத்தில் கடை ஊழியர்களை நடத்தும் விதத்தை பளார் என்று புரியும்படி அறைந்திருக்கிறார்.

பலரும் பணத்திற்கு பணி புரிபவர்கள்தான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பணம் மட்டுமே பிரதானம் இல்லை. பாராட்டப்பட வேண்டும் என்ற விருப்பம் பலருக்கும் உண்டு. அன்பாய் நடத்தப்பட வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. ஆனால் எத்தனை முதலாளிகள் ஊழியர்களை அன்பாய் நடத்துகிறார்கள்?

மதிப்பு அளியுங்கள்

'வேலைக்கும் ஆள் கிடைக்கவில்லை', 'சொல்ற வேலையை ஒழுங்காய் செய்வதில்லை', 'பணத்திற்கு மாரடிக்கிறார்கள்' என்று ஊழியர்களைக் குறை சொல்லிப் பயனில்லை. ஊழியர் களை மனதாரக் கட்டிப்பிடியுங்கள். பிறகு பாருங்கள், அவர்கள் உங்கள் கடையை தங்கள் கடையாய் பாவிப்பார்கள். வேலையை விரக்தியாய், விட்டேத்தியாய், வெட்டியாய் செய்யாமல் மகிழ்ச்சி யுடன் மனதார செய்வார்கள். வாடிக்கையாளர்களைக் கட்டிப்பிடிப்பார்கள். நீங்கள் வெற்றியைக் கட்டிப்பிடிப்பீர்கள்!

'நான் வேலைசெய்யும் நிறுவனம் என் மீது பரிவு காட்டுகிறது. என் மகிழ்ச்சிக்கு இயங்குகிறது' என்ற எண் ணத்தை ஊழியர் மனதில் விதைப்பதே கட்டிப்பிடிப்பது என்கிறார் மிட்சல்ஸ். இலட்சக்கணக்கில் வியாபாரம் செய்யும் தன் கடையின் ரகசியம் 'கட்டிப்பிடி வைத்தியம்' என்கிறார். பெரியதாய் ஒன்றும் இல்லை. 'ஊழியர்களிடம் அன்பாய் நடந்து அவர்கள் மீது நம்பிக்கை வைத்து, ஊழியம் செய்வதில் பெருமிதம் கொள்ள வைத்து முடிவெடுப்பதில் அவர்களையும் சேர்த்துக்கொண்டு அவர்கள் சேவையை மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். இது தான் கட்டிப்பிடி வைத்தியம்' என்கிறார்.

அன்பாக நடத்துங்கள்?

கடையை வாடிக்கையாளருக்குப் பிடிக்கும் வண்ணம் செய் பவர்கள் தங்கள் ஊழியர்களுக்கும் பிடிக்கும் வண்ணம் செய்கிறார்களா? விழித்திருக்கும் நேரத்தில் பாதிக்கும் மேல் கடையில் கழிக்கும் ஊழியர்களுக்கு பிடித்த வண்ணம் கடை இருக்கவேண்டாமா? பல கடைகளில் ஊழியர்களுக்கும் மேல் மட்ட நிர்வாகிகளுக்கும் தனித் தனி சாப்பிடும் இடம், பாத்ரூம் இருப்பதைப் பார்க்கலாம். உங்கள் வாழ்வு செழிக்க உழைப்பவர் களை இதைவிட உதாசீனப்படுத்த முடியாது. அவர்களோடு சேர்ந்து சாப்பிட்டால் குறைகிறதா?

அருகே இருப்பவர்களின் மனநிலையை நாமும் நம்மை அறியாமலேயே பெறுகிறோம் என்பதை சேர்ந்து இருப்பவர் களின் இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, சரும வெப்பநிலை போன்ற வற்றை அளந்து ஆராய்ச்சிகளில் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஊழியர்களை அன்பாய் நடத்தி அவர்களை மகிழ்ச்சிப்படுத் தும்போது அந்த மகிழ்ச்சியே தொற்று வியாதியாய் கடை முழு வதும் பரவும் என்பதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரம் இது. ஊழியரை அன்பாய் நடத்துங்கள்.

முழுமையாக நம்புங்கள்?

உழைக்கும் ஊழியர்களைக் கொஞ்சம் முழுமையாய் நம்பினால் தப்பில்லையே. நீங்கள்தானே நேர்முகத் தேர்வு செய்து தேர்வு செய்தீர்கள். அவர்களை சந்தேகப்பட்டால் தேர்வு செய்த உங்கள் திறமை மீதே சந்தேகப்படுகிறீர்கள் என்பது தானே அர்த்தம்?

கடைமுழுக்க சிசிடிவி கமரா பொருத்தி அனைத்தையும் ரூமில் உட்கார்ந்து ரிவியில் மாட்ச் பார்ப்பது போல் முதலாளிகள் பார்ப்பது எதற்கு? ஊழியர்கள் உங்கள் சொத்து. ஒழுங்காய்



வேலை செய்யாதவர்களைத் திருத்துங்கள். முடியவில்லை என்றால் வீட்டிற்கு அனுப்புங்கள். அதை விட்டுவிட்டு கமரா வைத்து ரிவியில் பார்த்துக் கொண்டிருக்காதீர்கள்!

கடை விற்பனை, வளர்ச்சி விகிதம், இலாப நஷ்ட கணக்கு இதையெல்லாம் பல நிர்வாகங்கள் ஊழியர்களிடம் முழுமையாகச் சொல்வதில்லை. உழைப்பவர்களுக்குத் தெரியாமல் இவை யாருக் குத் தெரிந்து என்ன ஆகப் போகிறது. கொஞ்சம் யோசிங்க பாஸ்!

பெருமிதம் கொள்ள வையுங்கள்?

உங்கள் கடை ஊழியரை யாராவது 'என்ன செய்கிறீர்கள்' என்று கேட்டால் பெருமையுடன் 'இந்தக் கடையில் வேலை செய்கிறேன்' என்கிறாரா இல்லை 'கடையில சேல்ஸ்மேனா இருக்கேன்' என்கிறாரா? உங்களிடம் வேலை செய்வதைப் பெரு மையாக நினைக்கவில்லை என்றால் அவர் கடையில் என்னத்தை பெரியதாய் செய்வார்? இல்லை நீங்கள்தான் என்ன சாதிப்பீர்கள்?

உரிமையாளர் என்பதற்காக காலை முதல் கிளம்பும் வரை ரூமிற்குள்ளேயே அடைந்து கிடக்கவேண்டும் என்று ஏதாவது நேர்த்திக் கடனா? உங்கள் கடை தானே ஐயா!, காலார கடை முழுவதும் நடவுங்கள். ஒவ்வொரு பகுதியாகச் சென்று ஊழியர் களோடு பேசுங்கள். ஊழியர்களின் பெயராவது உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். தெரியவில்லை என்றால் முதல் காரியமாய் தெரிந்துகொள்ளுங்கள். ஊழியர்களிடம் 'என்னப்பா எப்படி இருக்கிறாய்' என்று நலம் விசாரியுங்கள். தன் எம்டி தன்னை விசாரித்தார் என்று எத்தனை பெருமிதம் கொள்வார் தெரியுமா? தன் உடல் வருத்தி உங்களுக்காக உழைப்பார். புரிந்துகொள்ளுங்கள்.

முடிவெடுப்பதில் சேர்த்துக்கொள்ளுங்கள்?

ஊழியர் உங்களுக்கு வேலை செய்கிறாரா, உங்களோடு வேலை செய்கிறாரா? வித்தியாசம் புரிகிறதா? முக்கிய முடிவு களை எடுக்கும்போது அவர்களை அழைத்துப் பேசுங்கள். அவர்கள் சொல்வதைச் செய்யவேண்டும் என்பதில்லை. தன்னை மதித்துக் கேட்கிறார்கள் என்ற உணர்வு அவர்களுக்கு உத்வேகத்தை அளிக்கும். வேலையை இராஜினாமா செய்ப வர்கள் பலர் சொல்லும் காரணம்: 'என்னிடம் எதுவும் கேட்க மாட்டார்கள். ஒரு பொருட்டாகவே நினைக்கமாட்டார்கள்.' நீங்களும் அப்படி செய்யாதீர்கள்.

கடையில் உழைக்கும் ஒவ்வொருக்கும் தங்கள் எண்ணங் களை, ஐடியாக்களை கூறும் சந்தர்ப்பத்தை அளியுங்கள். நாள் தோறும் பலநூறு வாடிக்கையாளர்களைச் சந்தித்து பழகும் அவர்களுக்கு எத்தனை விடயங்கள் தெரிந்திருக்கும், அதைப் பெற்று அதன்படி உத்தி அமைப்பது எத்தனை சக்தி வாய்ந்தது. செய்யுங்களேன்!

பாராட்டுங்கள்?

ஊழியர்களுக்கு மதிப்பு கொடுங்கள். பல இடங்களில் ஓய்வுபெறும் அன்றுதான் கூப்பிட்டு பாராட்டுவார்கள். இருக் கும்போதே நன்றாக வேலை செய்பவர்களை, விற்பனை இலக்கை அடைந்தவர்களை, நல்ல ஐடியா கொடுத்து வியா பாரத்தை உயர்த்துபவர்களை வலியச் சென்று பாராட்டுங்கள். அனைவரோடும் சேர்ந்து கை தட்டுங்கள். சிந்தியுங்கள்!

ஊழியர்களுக்கும் சொந்த பிரச்சினைகள் இருக்கும். அவர்களும் உங்கள் குடும்பம்தானே. முடிந்தவரை உதவு ங்கள். அவர் வலியை நீக்க முயற்சியுங்கள். குறைந்தபட்சம் சாய்ந்து கொள்ளத் தோள் கொடுங்கள்.

நல்ல மனிதனாய் இல்லாதவன் நல்ல தலைவனாக இருக் கவே முடியாது. உங்கள் ஊழியர்களுக்கு நல்லவனாய் இருங்கள். அன்பாய் நடத்துங்கள். கட்டிப்பிடியுங்கள். ஊழியர்கள் மனம் நிறைந்தால்தான் உங்கள் கல்லா நிரம்பும். இதை மறக்காதீர்கள்!

## யாழில் எல்பி பினான்ஸின் 2 கிளைகள் திறப்பு

எல்.பி பினான்ஸ் நிதி நிறுவனத்தின் இரண்டு புதிய கிளைகள் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டன. இந்நிறுவனங்களின் முதன்மைக் கிளை அலுவலகம், யாழ்ப்பாணம் - ஆஸ்பத்திரி வீதியிலும் யாழ்.நகரக் கிளை, ஸ்ரான்லி வீதியிலும் திறந்து வைக்கப்பட்டன.

நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுமித் ஆதிஹெட்டி, சம்பிரதாயபூர்வமாக இவ்வலு வலகங்களைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வுகளில், கிளை உத்தியோகஸ்தர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டனர்.




## நாளாந்த இழப்பு 380,000 டொலர்கள்

கொழும்பு துறைமுக நகர்த்திட்டம் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக அந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சீனக் கம்பனிக்கு நாள் ஒன்றுக்கு 3 இலட்சத்து 80 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் (அண்ணளவாக ரூ.49 மில்லியன்) இழப்பு ஏற்பட்டுள்ளதாக அக்கம்பனி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகர்த் திட்டத்தினை 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை சீனாவின் சி.சி.சி.சி நிறுவனத்திற்கு (China Construction Communication Company - C.C.C.C) முன்னாள் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ச அனுமதி வழங்கியிருந்தார்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலை மையிலான புதிய அரசாங்கம் மேற்படி திட்டத்தில் பலகோடி ஊழல் நடந்திருப்பதாக குற்றம்சாட்டி அதற்கு தற்காலிகமாக தடைவிதித்துள்ளது.


இலங்கையின் புதிய அரசாங்கத்தின் அறிவிப்பால் சீன நிறுவனத்திற்கு நாள்தோறும் 380,000 அமெரிக்க டொலர்களை இழப்பு ஏற்படுகிறது என்று C.C.C.C நிறுவனம் வெளியிடப்பட் டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கொழும்பு துறைமுக நகர்த்திட்டத்திற்கென வாங்கிய கடனுக்கான வட்டி அதிகரிக்கின்றது. துறைமுகப்பகுதியில் 200 மீட்டர் வரை தடுப்புச்சுவர் கட்டப்பட்டுள்ளது. தற்போது நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டதால் மேற்படி தடுப்புச்சுவர் நாளாந்தம் சேத மடைகின்றது. அதை மீண்டும் சரிசெய்வதாயின் கூடுதலான செலவை எதிர்கொள்ளவேண்டிவரும் அத்துடன் இந்தத் திட்டத் தில்நேரடியாக ஆயிரம்பேரும்மறைமுகமாக 4000 பேரும்வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். அவர்களின் வாழ்வாதாரமும் கேள்விக் குறியாகியுள்ளது என்றும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

## 33 விநியோகஸ்தரை வியட்நாமிற்கு அழைத்துச் சென்ற மல்ரிலக்

கம்பனியினது சந்தைப் பரப்பெல்லையினை அதிகரிப்பதில் பங்களிப்புச் செய்த விநியோகத்தர்களின் முயற்சியை அங்கீ கரிக்கும் நோக்கில் Multilac ஆனது வியட்நாமிற்கு அவர் களது 33 விநியோகத்தர்களை சகல செலவுகளுடன் கூடிய ஒரு சுற்றுலாவிற்கு அழைத்துச் சென்றது.

மிகச் சிறந்த விற்பனை வருமானத்தினை அடைந்த அர்ப்பணிப்பு மிகுந்த விநியோகத்தர்கள் இந்த அற்புதமான வாய்ப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த 4 நாள் சுற்றுலாவில் வியட்நாமின் மிகவும் பிரபல்யமான உல்லாசப் பயண ஈர்ப்பு கொண்ட இடங்கள் உள்ளடங்கியதுடன் சகல பங்கேற் பாளர்களுக்கும் ஒரு தனித்துவமான அனுபவம் வழங்கப்பட்டது.



## இலங்கையில் சம்சுங் முதலிடம்

தென்கொரியாவின் ஸ்மார்ட்ஃபோன் உற்பத்தியாளரான சம்சுங் கையடக்க தொலை பேசிகள் விற்பனைகள் இலங்கையில் விற்பனை யாகும் மொத்த கையடக்க தொலைபேசி விற்ப னைகளில் சுமார் 30 சதவீதத்தை தன்வசம் கொண்டுள்ளதாக இன்டர்நஷனல் டேட்டா கோர்ப்பரேஷன் மேற்கொண்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த தரப்படுத்தலில் இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை முறையே Huawei மற்றும் Nokia ஆகி யன பெற்றுள்ளன.

2014 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் இந்த பெறுபேறுகள் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக் கது. சம்சுங் ஸ்மார்ட்ஃபோன்களை பொறுத்தமட்டில் Galaxy S Duos எனும் ரகம் அதிகளவு கேள்வியை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. Huawei தரப்படுத்தலில் இரண்டாமி டத்தை 18 சதவீதத்துடன் பெற்றிருந் ததுடன், 9 சதவீதத்துடன் மூன்றாமி டத்தை Nokia பெற்றுக்கொண்டது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,091.25 | 7,054.58 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,047.97 | 4,016.9 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,408.432 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சாம்சன் இன்ரனட்(104.40), ஹோட்டல் சிகிரியா (96.00), ஈகுவிட்டி(45.50), செரண்டிப் ஹோட்டல்(32.10), புளூ டைமண்ட்ஸ்(1.60).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** அக்சஸ் இன்ஜி.(21.60), ரம்பொட போல்ஸ் (24.30), மல்ரி பினான்ஸ்(20.60), சிரஸ் கிக்கடுவ(15.20), [illegible] ஹோட்டல் (X) (21.20). மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.89 | 134.72 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 194.08 | 199.64 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 140.03 | 144.71 |
| சுவிஸ் பிராங் | 132.53 | 137.20 |
| கனேடிய டொலர் | 103.41 | 106.82 |
| அவுஸ்திரேலிய டொலர் | 100.32 | 104.36 |
| சிங்கப்பூர் டொலர் | 94.77 | 97.83 |
| ஜப்பான் யென் | 1.08 | 1.12 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பருத்தித்துறை கரணவாயில் அமைந்துள்ள இளங்கோ சனசமூக நிலைய இரண்டு மாடிக்கட்டடத்தை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் பசுபதி சீவரத்தினம் திறந்து வைப்பதையும் சனசமூக நிலையத் தலைவர் சி.ஜி.திருமாலழகன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நடன நிகழ்வையும் படங்களில் காணலாம்.





18 இலட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை தும்பளை தெற்கில் அமைக்கப்பட்ட பற்றிக் உற்பத்தி நிறுவத்தினை அண்மையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்வதையும் பெண் ஒருவர் நிறுவனத்தில் துணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதையும் படங்களில் காணலாம். (படங்கள்: தும்பளை, கரணவாய் செய்தியாளர்)

யாழ்.தென்மராட்சி கல்வி வலயத்தின் **நாதநர்த்தன வர்ணம்** எனும் கலை நிகழ்வு சாவகச்சேரி நகராட்சி பொன் விழா மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போது.. (படங்கள்:சாவகச்சேரி செய்தியாளர்)





வடமாகாண சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் மற்றும் சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் ஆகியோருக்கான பாராட்டு விழா அண்மையில் யாழ்.ஆங்கில மருந்தக வணிகர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிறின்கிறாஸ் விடுதியில் நடைபெற்ற போது...

## நிழல்கள்




யாழ்.கொட்டடி சனசமூக நிலையமும் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர்தின நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட பெண்கள் 15 பேரையும் நிர்வாகத்தினரையும் மற்றும் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்ட செல்வி லோகநாதன் சங்கீதா பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் தொழிலாளர்கள் யாழில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.நவீன சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தைக் கண்டித்து மாநகரசபையின் எல்லைக்குள் பணிபுரியும் சுகாதாரத் தொழிலாளர்கள் இன்று காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

யாழ்.நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள புடைவைப் கடையொன்றினை யாழ்.மாநகர சபை சீல் வைத்து மூடியமையினால் வியாபாரிகளுக்கும் மாநகர சபை ஊழியர்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் வியாபாரிகளின் நடவடிக்கையை கண்டித்து வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இப் போராட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

இதில் 600இற்கும் மேற்பட்ட சுகாதாரத் தொழிலாளர்கள் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவம் குறித்து தொழிலாளர்கள், வியாபாரிகள் மீதும் வியாபாரிகள் யாழ்.மாநகர சபை சுகாதார தொழிலாளர்கள் மீதும் பரஸ்பரம் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ




# புலம்பெயர் தமிழர்களின் வரவு தொடர்பில் ஜனாதிபதியின் கருத்து வரவேற்கத்தக்கது

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் இலங்கை வரவு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருக்கும் சாதகமான கருத்துக்களை வரவேற்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.**



இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்திருக்கும் அவர், புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் இலங்கைக்கான வரவுகளின்போது ஏற்படுத்தப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட வேண்டுமெனவும், இலங்கையில் அம்மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கும், முதலீடுகளை மேற்கொள்வதற்கும் உரிய ஏற்பாடுகள் செயற்படுத்தப்பட வேண்டுமெனவும் நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளோம்.

புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் தமிழ்மக்கள் கடந்த காலங்களில் இலங்கை தொடர்பில் பல்வேறு சந்தேகங்களைக் கொண்டிருந்த காரணத்தால், இலங்கை வர ஆர்வம் காட்டியிராத நிலையில், அவர்களது சந்தேகங்களைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அம்மக்கள் தாராளமாக இலங்கை வரலாமெனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தெரிவித்திருக்கும் இக் கருத்துக்கள் எமது மக்களுக்கு நமபிக்கை அளிப்பதாகவே உள்ளன.

இவ்விடயம் தொடர்பில் எமது மக்களுக்குச் சாதகமான செயற்பாட்டினை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமது மக்கள் சார்பாகத் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகவும் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்.வடமேற்கு பிரப்பம்பதி செல்வ விநாயகர் பெருமான் தான்தோன்றி ஸ்ரீஞானவைரவப் பெருமான் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று 23 ஆம் திகதி திங்கட்கிழமை சதுர்த்தி திதியும் பரணி நட்சத்திரமும் கூடிய முற்பகல் 9.30 மணி தொடக்கம் 11 மணிவரையான சுப நேரத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து ஆலய புனரமைப்பிற்கான அடிக்கல் நாட்டுகின்ற வைபவமும் இச் சுபநேரத்தில் இடம்பெறும் என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (இ)





# தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாகலிங்கேஸ்வரர் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 11 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெற்று வருகின்றது.

இவ்விஞ்ஞாபனத்தின் தேர்த் திருவிழா நாளை 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நாளை மறுதினம் 25 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (இ



யாழ்.கோப்பாய் தெற்கு வைரவர் ஆலயத்தில் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் அனுசரணையுடன் சிவதொண்டர் அணி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் அங்குரார்ப்பண வைபவம் நல்லூரிலுள்ள அகில இலங்கை இந்துமாமன்ற பணிமனையில் அண்மையில் இடம்பெற்றது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் சிவதொண்டர்களுக்கு சால்வைகள் வழங்கி அணியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தென்புலோலி உபய கதிர்காம தான்தோன்றி முருகன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதேவேளை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும். (இ-3)

# மீளாய்வு கூட்டம்

(சாவகச்சேரி)

பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 2000 ரூபா கொடுப்பனவு பெறுவோருக்கான மீளாய்வு ஜே/304 மண்டுவில் கிராம சேவையாளர் பிரிவில் இன்று திங்கள் காலை மு.ப காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

ஜே/304 கி.சே.பிரிவுக்குட்பட்ட பயனாளிகளை இதன்போது மீளாய்வு செய்து கொள்ளுமாறும் பணம் பெறும் அத்தாட்சிப்பத்திரம், குடும்ப அட்டை, அடையாள அட்டை ஆகிய வற்றையும் தவறாது எடுத்து வருமாறும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-29)

# யானை தூக்கிவீசிய வயோதிபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

யானை தூக்கி வீசியதில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

மன்னார் முருங்கனைச் சேர்ந்த பிலிப் அந்தோனி (வயது-67) என்ற 5 பிள்ளைகளின் தந்தையான முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த 7ஆம் திகதி மன்னார் பாணாங்கட்டிகுளம் பகுதியில் குறித்த முதியவர் இரவு 8 மணியளவில் வந்து கொண்டிருந்த போது தனது குட்டியுடன் வந்த யானை ஒன்று இடைமறித்துள்ளது.

இந்நிலையில் குறித்த முதியவர் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நோக்குடன் அவ்விடத்தை விட்டு ஓட முற்பட்டுள்ளார்.

இருப்பினும் துரத்திச் சென்ற யானை குறித்த முதியவரை தனது தும்பிக்கையால் வளைத்துப் பிடித்து தூக்கி வீசிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளது.

இதனையடுத்து படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட முதியவர் பின்னர் அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ

# பாபாவின் ஊர்வலம்

ஸ்ரீராம நவமியை முன்னிட்டு ஏகதின இலட்சார்ச்சனையும் பாபாவின் சாவடி ஊர்வலமும் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை பூசைகள் நடைபெறும். (இ-3)

# சதுர்த்தி உற்சவம்

வண். வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்திஉற்சவம் இன்றுதிங்கட்கிழமை மாலை 5 மணியளவில் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூசை, வசந்த மண்டப பூசையுடன் விநாயகப் பெருமாள் திருவீதி வலம் வரவுள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு கவிதை நூல்கள் வெளியீடும் ஒலிக்கவிதை இறுவெட்டு அறிமுகவிழாவும்

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் வர்ணம் கிரியேஷன்ஸ் வெளியீட்டில் கவிஞர் க.வீராவின் "கண்ணடிக்கும் காலம்" , "இரண்டாம் உயிர்" ஆகிய இரு கவிதை நூலினதும் " இரண்டாம் உயிர்" ஒலிக்கவிதை இறுவெட்டினதும் அறிமுக விழா பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் மங்கல விளக்கினை சிவஸ்ரீ சபா.மங்களேஸ்வரக் குருக்கள் தம்பதியினர் ஏற்றி வைக்க செல்வி ஹம்சத்வனி சோமசுந்தரக் குருக்கள் தமிழ்த்தாய் வாழ்த்திசைக்க செல்வி சர்வாணி சரவணபவக் குருக்களின் வரவேற்பு நடனத்தை தொடர்ந்து வரவேற்புரையினை தமிழ்ச்சங்க இலக்கியகுழு செயலாளர் ஆழ்வார்பிள்ளை கந்தசாமி நிகழ்த்துவார்.

தொடர்ந்து ஆசியுரையினை சிவஸ்ரீ குமார.சரவணபவக் குருக்களும் வாழ்த்துரையினை சைவப் புலவர் செல்லத்துரையும் வழங்கவுள்ளனர்.

தலைமையுரையை தொடர்ந்து துணவியூர் கேசவனது சிறப்புரையும் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் ஆ.இரகுபதி பாலஸ்ரீதரனது நூலறிமுக உரையும் இடம்பெறும்.

நூல் தொகுதியை பேராசிரியர் சபா.ஜெயராசா வெளியிட தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினரும் சமூக ஆர்வலருமான அரிய ரட்ணம் பெற்று மதிப்பளிப்பார்கள்.

சிறப்பு பிரதிகளை தொடர்ந்து "இரண்டாம் உயிர்" கவிதை நூல், இறுவெட்டுக்கான மதிப்பீட்டுரையை 'ஞானம்' இதழ் ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரனும் "கண்ணடிக்கும் காலம்" நூலுக்கான மதிப்பீட்டுரையை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தை சேர்ந்த திருமதி பவானி குமுந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து சிறப்பு நிகழ்வாக செல்வி ஹம்சத்வனி சோமசுந்தரக்குருக்களது இன்குரல் வளத்துடன் இசையரங்கமும் இடம்பெவுள்ளது. அணிசெய் கலைஞர்களாக மிருதங்கம் நல்லை க.கண்ணதாஸ், வயலின் திருமதி மதுரா பாலச்சந்திரன், மோர்சிங் வி.பிரபா ஆகியோர் பங்கேற்கின்றனர். விழா நிகழ்ச்சிகளை யாழ்.பல்கலை.மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா தொகுத்து வழங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

# கூறுவிலை

வடக்கு மாகாண சபையின் கௌரவ அவைத் தலைவர் கௌரவ பிரதி அவைத் தலைவர் மற்றும் கௌரவ உறுப்பினர்களுக்கு 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் பின்வரும் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு கூறுவிலை கோரப்படுகின்றது.

01. கணனிகள்
02. போட்டோப்பிரதி இயந்திரங்கள்
03. அலுவலக மேசை, கதிரைகள்
04. அலுவலக கோவை அலுமாரிகள் (Filling Cabinet)
05. அலுவலக அலுமாரிகள் (Office Cupboards)
06. பிளாஸ்ரிக் கதிரைகள் (Plastic Chairs)
07. கணனி மேசை, கதிரைகள்
08. தொலை நகலிகள் (Fax Machine)
09. ஒளிப்படக்கருவிகள் (Camera)
10. சொகுசு இருக்கைகள் (Sofa Set)
11. பிறின்டர்கள் (Printers)
12. ஸ்கானர்கள் (Scanner)

கூறுவிலை கோரல் படிவங்களை ஏ-9 வீதி, கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் நிதிக்கிளையில் மீளளிக்க முடியாத வைப்புப் பணம் 1000/= செலுத்தி அலுவலக நேரத்தில் 23.03.2015 தொடக்கம் 16.04.2015 வரை பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர், பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சேவை**

(ஜி-430)

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....
யாழ் **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)





- Nail art
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) மெஹந்தி போடுதல்



- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)





புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.03.2015
புதன்கிழமை காலை 9.30 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

**பாராட்டி வாழ்த்துகிறோம்**



திரு. சதாசிவம் புண்ணியமூர்த்தி
(இ.அ.சே-தரம்-I)

இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வளர்ச்சியின் சிகரமாய் விளங்கும் பாடசாலையின் முதல்வர் திருவாளர் சதாசிவம்- புண்ணியமூர்த்தி 10.03.2015 அன்று கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்களுக்கான பதவி உயர்வு வழங்கும் நிகழ்வில் இலங்கை அதிபர் சேவையில் முதலாம் தர அதிபர் சேவை நியமனத்தை பெற்றமையை இட்டு பெருமகிழ்வடைவதுடன் அவர் பணி மேலும் சிறக்கவும் அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்
கிராமமட்ட அமைப்புக்கள்,
7 ஆம் யுனிற், கல்முநகர்.

(9862)

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 38 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்<br>தொ.இ: B/441 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 23 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்<br>தொ.இ: G/714 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 61 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/442 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 85 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>தொ.இ: G/715 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: திரவாதிரை<br>கி.பா: 22 சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: B/449 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 19 சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: B.COM, HNDA/ ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/719 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 22 செவ் 4 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: B/453 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 28 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBA/ அரச தொழில்<br>தொ.இ: G/728 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தினை வடக்கில் அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது

## சுகாதார அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்படும் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் 2015 மார்ச் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் முதலாம் திகதி வரை வடமாகாணத் திலும் அமுலாக்கப்பட திட்டமிடப்பட் டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.**

எதிர்வரும் தென்கிழக்கு பருவமழையைத் தொடர்ந்து நாடெங்கும் டெங்குநோய் பரவக்கூடிய ஏதுநிலை காணப்படுவதால் இவ் அபாய நிலையத் தடுக்கும் நோக்குடன் சுகாதார அமைச்சினால் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் மார்ச் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை பிரகடனப்படுத்தப்பட்டு இக்காலப் பகுதி முழுவதும் அதன்பின் தொடர்ச்சியாகவும் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முழு அளவில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையின் ஆரம்ப கட்டமாக வடமாகாணத்தில் இத் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தினை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதற்காக அனைத்து திணைக்களங்களினதும் பூரண ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்காகவும் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்காகவும் வடமாகாண சுகாதார அமைச்சர் தலைமையில் மாகாண மட்ட நுளம்புக் கட்டுப்பாட்டுக் கூட்டம் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் கடந்த 19 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், செயலாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சிஉதவி ஆணையாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்கள், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இந் நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தில் அண்மையில் ஏற்பட்ட டெங்கு நோய் நிலைமையின் படி நாட்டிலுள்ள அனைத்துப் பிரதேசங்களையும் மிக ஆபத்தான இடங்கள், ஆபத்தான இடங்கள், ஏனைய இடங்கள் எனப் பிரித்து அதற்கேற்றவாறாக நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 26,27,28 ஆம் திகதிகளில் தெரிவு செய்யப்பட்ட மிக அதிக ஆபத்தான பிரதேசங்களிலுள்ள வீடுகள், பாடசாலைகள், வேறு கல்வி நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், கட்டட நிர்மாண வேலை நடைபெறுமிடங்கள், தொழிற் சாலைகள், மதவழிபாட்டுத்தலங்கள் ஏனைய பிற இடங்களை குழுக்களாகச் சென்று பரி சோதனை செய்து நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பபட்டுள்ளது.

மார்ச் மாதம் 29 ஆம் திகதி பொது இடங்கள், வழிபாட்டுத் தலங்கள் வடிகால்கள், மயானங்களை குழுக்களாகச் சென்று பரிசோதனை செய்து நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 30,31ஏப்ரல்மாதம் முதலாம் திகதிகளில் தெரிவு செய்யப்பட்ட ஆபத்தான ஏனைய இடங்களிலும் வீடுகள், பாடசாலைகள், வேறு கல்வி நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவணங்கள், கட்டட நிர்மாணவேலை நடைபெறுமிடங்கள், தொழிற்சாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், ஏனைய பிற இடங்களை குழுக்களாகச் சென்று பரிசோதனை செய்து நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை குழு நடவடிக்கைகளில் குடியிருப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நிறுவனங்களின் டெங்கு /நுளம்புக் கட்டுப்பாட்டு குழு உறுப்பினர்கள், பொலிஸ் முப்படை வீரர்கள் சுகாதார உத்தியோகத்தர்கள்; தொண்டர்கள், உள்ளூராட்சி ஊழியர்கள், கிராமிய டெங்குக்குழு உறுப்பினர்கள், மத தலைவர்கள், சமூகத் தலைவர்களின் பங்களிப்பைப்பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட மட்ட மற்றும் பிரதேச மட்ட குழுக்களை அழைத்து கலந்துரையாடி இவ் வேலைகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதுடன் இத் துப்புரவு வேலைத்திட்டத்திற்கு அனைவரும் ஆக்கபூர்வமான பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கி நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் இவ் வேலைத்திட்டம் வெற்றி பெற ஒன்றிணைந்து செயற்படுவோம் என அவர் மேலும்அறிவித்துள்ளார். (இ)

# பேசும் படம்-61

இடம்:-நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



சைக்கிளில் ஓடிப் போகலாம் இருந்தும் போகலாம். அதென்னடா நின்று போறது-இந்தக் காட்சியைப் பார்த்த முதியவர் கூறியது.

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.16

**தபால் முகவரி: ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,**
**இல.03, 2-ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
அல்லது நேரில்.

அனுப்பியவர்:-
வி.விபுலானந்,
யாழ்ப்பாணம்.

# மட்டக்களப்பிலிருந்து இடம்பெயர்ந்த சிங்களவரை குடியேற்ற நடவடிக்கை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து யுத்த காலத்திற்குள் இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த சிங்கள மக்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் டேபா மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட், மாகாண கல்வி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் சி.தண்டாயுதபாணி, மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் மத்திய மீள்குடியேற்ற அமைச்சின் உதவி செயலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஜயந்திபுரம், கருவப்பங்கேணி ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்றதாக கருதப்படும் 64 குடும்பங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது மீள்குடியேற்றப்பட வேண்டியதாக தெரிவிக்கப்படும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)





யாழ்.புற்றாளை மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தரம் 3 மாணவர்களுக்கான **மகிழ்ச்சிகரமான ஆரம்பம்** நிகழ்வில் மாணவர்களின் ஆக்கங்கள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளதையும் விருந்தினர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் காக்கும் சுகாதார பணியில் இணைந்த தொண்டர்கள் பலர் இன்று உயிருடன் இல்லை

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கவலை

(குருமன்காடு)

**வடக்கு மாகாணம் கடந்த பல வருடங்களாக யுத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டு பாரிய அழிவுகளை சந்தித்திருக்கிறது. எமது மாகாணத்தில் சுகாதார சேவையை மேம்படுத்தும் நோக்கில் கடுமையான ஆளணி பற்றாக்குறை இருந்த காலத்தில் பலர் தாமாகவே முன்வந்து உயிர்காக்கும் இந்த சேவையில் ஈடுபட்டார்கள். அவர்களில் பலர் இன்று எங்கள் மத்தியில் இல்லை. அவர்கள் தமது சேவை நேரத்திலேயே கொடிய யுத்தத்தால் மரணித்துள்ளார்கள். அவர்களுக்கு நாம் அஞ்சலி செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

2010, 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மலேரியா தடுப்பு, காசநோய் தடுப்பு போன்ற வேலைகளில் நாம் முன்னர் பணியாற்றிய தொண்டர்களை 6ஆயிரம் ரூபாய் உதவித் தொகையில் இணைத்தோம். அந்த நேரத்தில் அரசியல் தலையீடு காரணமாக நாம் சரியாக செய்ய முடியாது போனது. அந்தந்தப் பகுதி அரசியல்வாதி ஊடாக பெயரை அனுப்புமாறு எமது சுகாதார அமைச்சர் கோரியிருந்தார். நாம் அனுப்பியிருந்தோம். ஆனால் நாம் பெயர் கொடுத்தவர்களில் பலர் நீக்கப்பட்டு புதியவர்கள் பலர் இணைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் எங்கு உள்ளது என்றுகூட தெரியாத நிலையே இருந்தது. குறிப்பாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு பகுதிகளில் அதிகமாக இவ்வாறு நடந்தது.

2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் இலங்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டு அமைய அடிப்படையில் வேலை செய்பவர்களை நிரந்தரமாக்கும் படி சுற்றுநிருபம் ஒன்று சுகாதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் அமைய அடிப்படையில் 100 பேரை உள்வாங்கக் கூடியதாக இருந்தது. அதற்கு பின்னர் தேர்தல் நடைபெற்று புதிய அரசாங்கம் இந்த நாட்டில் உருவாக்கப்பட்ட பின்னர் இன்னுமொரு சுற்றுநிருபம் அனுப்பப்பட்டிருந்தது.

திட்டங்கள் ஊடாக அமர்த்தப்பட்டவர்களில் தொடர்ச்சியாக 180 நாட்கள் அதாவது 2014 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் வரை தொடர்ச்சியாக பணியாற்றியவர்களை நிரந்தரமாக்கும்படி அனுப்பப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில்தான் எந்தவித அரசியல் பாகுபாடின்றி, மாவட்ட வேறுபாடின்றி இந்த சுற்றுநிருபங்களுக்கு அமைவாக தெரிவு செய்துள்ளோம். இவர்களுக்கே நியமனம் வழங்குகின்றோம்.

குறிப்பாக எமது மாகாணசபை உருவாகிய பின் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது இருந்தது. ஒரு பக்கமும் திரும்ப முடியாது இருந்தது. கடந்த தேர்தலின் பின் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால் எங்களுடைய மாகாணசபை மெல்ல மெல்லமாக இயங்க ஆரம்பித்துள்ளது. இந்த மாகாண சபையின் இயக்கம் நிரந்தரமானதாக இருக்க வேண்டும். யுத்தத்தில் பாதிப்படைந்த இந்த மாகாண மக்களுக்கு இந்த மாகாணசபை ஒரு ஒளிக்கீற்றை தரவேண்டும்.

சிலர் 20 வருடங்களாக தொண்டர்களாக பணியாற்றிய பின் இன்று நிரந்தர நியமனம் பெற முடியாது அழுது கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னைய அரசியல்வாதிகளும் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் கடந்த கால நேர்முக தேர்வின் மூலம் உள்வாங்கப்பட்டார்கள். அவர்களை வெளியே விட்டு புதியவர்களை கொண்டு வந்தவர்கள் அரசியல்வாதிகள். அவ்வாறு கொண்டுவரப்பட்டவர்களும் தற்போது இல்லை. இவர்களையும் உள்வாங்க முடியவில்லை. அவர்களை கைவிட நாமும் தயாராக இல்லை. அவர்களுக்கு வயது ஒரு தடையாக உள்ளது. குறைந்தது 10 வருடம் சேவையாற்ற வேண்டும். அதன் மூலமே ஓய்வூதியம் பெற முடியும். அதனைக் கருத்தில் கொண்டு ஏனையவர்களையும் விரைவில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (அ-2-250)

# புகையிரத கடவை தடுப்பு கம்பம் உடைந்த நிலையில்

## சீராக்குமாறு கோரிக்கை



கிளிநொச்சி பொதுச் சந்தைக்கு அருகாமையிலுள்ள கனகபுரம் வீதியில் அமைக்கப்பட்டுள்ள புகையிரத கடவைக்கான தானியங்கி தடுப்பு கம்பம் கடந்த மூன்று நாட்களுக்க முன்னர் உடைந்துள்ளமையை அடுத்து அதற்கு தடி பொருத்தப்பட்டு கட்டப்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.


உடைந்த பகுதிக்கு தடியொன்று கட்டப்பட்டுள்ள நிலையிலேயே தானியங்கி தடுப்பாணை இயங்கி வருவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இக்கடவையால் கிளிநொச்சி பொதுச் சந்தைக்கும் பேருந்து தரிப்பிடத்துக்கும் என பொதுமக்களும் வாகனங்களும் சென்று வருகின்றன.

தினமும் நூற்றுக்கணக்கான வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இக்கடவையால் சென்றுவர வேண்டியுள்ளதால் திடீரென விபத்து ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் குறித்த கடவைக்கு அருகில் அமைக்கப்பட்ட வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லையென கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே காலம் தாழ்த்தாது சம்பந்தப்பட்ட புகையிரதப் பொறுப்பதிகாரிகள் உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டு சீராக்கித் தருமாறு பொதுமக்களும் வர்த்தகர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-271)




## நேரசூசியை தரும் வரையில் பேருந்து சேவை நடக்காது!

### கிளி.சாலை முகாமையாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், போக்குவரத்திற்கான நேரசூசி ஒதுக்கீட்டை தரும்வரையில் புதிய பேருந்துகள் எவையும் சேவையில் ஈடுபடுத்தப்படமாட்டாது என இலங்கை போக்குவரத்துச் சபையின், கிளிநொச்சி சாலை முகாமையாளர் எஸ்.ஜீவாநந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சி -முல்லைத்தீவு வழித்தடத்தில் தனியார் பேருந்து மற்றும் போக்குவரத்துச் சபை பேருந்துகளுக்கிடையில் நீண்டகாலமாக பிரச்சினை இருக்கின்றது. இதனால், இரண்டு தரப்பினரும் அடிக்கடி மோதல்களில் ஈடுபடுகினறனர். இது தொடர்பாக பல தடவைகள் மாவட்டச் செயலாளரிடம் முறையிட்டுளோம். இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

மேற்படி வழித்தடத்தில், போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவையால் பாடசாலை மாணவர்கள் பயனடைகின்றனர். இந்த பேருந்து சேவை மிகவும் அவசியமானது. பிணக்குகள் ஏற்பட்டதன் காரணமாக இந்த வழித்தட பேருந்து சேவைகள் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எமது சாலைக்கு அண்மையில் 4 புதிய பேருந்துகள் கிடைத்துள்ளன. அந்தப் பேருந்துகளை மாவட்டச் செயலாளர் நேரசூசி தரும் வரை சேவையில் ஈடுபடுத்தப்போவதில்லை என்றார். (அ-2)



வாய்ச் சுகாதார சர்வதேச தினத்தையொட்டி,மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு கருத்தரங்கும் ஊர்வலமும் அண்மையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்னால் ஆரம்பமாகி பிரதான வீதியூடாக மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்து, மீண்டும் மன்னார் பொது [illegible] வீதியூடாக மன்னார். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினை சென்றடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1097

## நான் கத்தவே இல்லை...!

கண்ணுசாமி, பில்லாகுடி என்ற குக்கிராமத்தில் வசித்து வந்தான். மகா கஞ்சன். ஒரு நாள, விமான நிலையத்தைப் பார்ப்பதற்காக தன் மனைவியோடு வந்திருந்தான். விமானம் மேலே கிளம்புவதையும், வானில் வட்டமிடுவதையும், கீழே இறங்குவதையும், இருவரும் ஆர்வத்துடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர்.



அவர்களின் ஆர்வத்தைப் பார்த்த அங்கிருந்த விமானி ஒருவர், "நீங்கள் இருவரும் வாருங்கள் இந்த விமானத்தில் ஏறி, வானத்தில் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வரலாம். ஆளுக்கு நூறு ரூபாய்தான!" என்றார்.

கஞ்சனுக்கு ஆர்வம் தான். இதற்காகவா இருநூறு ரூபாய் வீண் செலவு செய்வது என்று நினைத்து, "நாங்கள் வரவில்லை," என்றான்.

எப்படியும் அவர்களிடம் பணம் பெற நினைத்த விமானி "நீங்கள் பணம் தர வேண்டாம். எந்தக் கட்டணமும் இல்லாமல், உங்களை இனாமாகவே விமானத்தில் ஏற்றிச் செல்கிறேன். வானத்தில் விமானம் பறக்கும்போது, என்ன நடந்தாலும், நீங்கள் சிறு சத்தம் கூடப் போடக் கூடாது. அப்படி சத்தம் போட்டுவிட்டால், கட்டணமாகிய இருநூறு ரூபாயை நீங்கள் கொடுத்துவிட வேண்டும். சம்மதம் தானே?" என்றார்.

"சம்மதம்!" என்றான் கஞ்சன். தன் மனைவியுடன், விமானத்தில் ஏறி அமர்ந்தான். விமானம் பறக்கத் தொடங்கியது.

வானத்தில் விமானம் குட்டிக் கரணம் போட்டது. தலை கீழாகப் பறந்தது. சீறிப் பாய்ந்தது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு இருந்த கஞ்சன், சிறு ஓசை கூட எழுப்பவில்லை. வேறு வழியின்றி விமானத்தைத் தரை இறக்கினார் விமானி.

கஞ்சனின் கையைக் குலுக்கி, "ஆமாம், பயமுறுத்தும் விமான விளையாட்டுகளை நான் வானத்தில் செய்யும்போது, இதுவரை எனக்குத் தெரிந்து சிறு ஓசைகூட எழுப்பாது இருந்தீர்கள்! என் பாராட்டுக்கள். எப்படி இது உங்களால் முடிந்தது?" என்று கேட்டார் விமானி.

"நான் கூட, ஒரே ஒரு சமயம், என்னை அறியாமல் கத்த இருந்தேன். எப்படியோ முயன்று அடக்கிக் கொண்டேன்!" என்றான் கஞ்சன்.

"எப்போது?" என்று கேட்டார் விமானி.

"என் மனைவி, விமானத்தில் இருந்து தவறிக் கீழே விழுந்தபோது!" என்றான் கஞ்சன்.

மயங்கி விழுந்தார் விமானி.

### சாஹீது பகத்சிங்



'சாஹீது பகத்சிங்' என அழைக்கப்படும் 'பகத்சிங்' அவர்கள், 1907 ஆம ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி, இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் லயால்பூர் மாவட்டத்திலுள்ள "பங்கா" என்ற கிராமத்தில், சர்தார் கிசன் சிங் என்பவருக்கும், வித்தியாவதிக்கும் இரண்டாவது மகனாக ஒரு சீக்கிய குடும்பத்தில் பிறந்தார்.

இவர் ஒரு குறிப்பிடத்தக்க இந்திய விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் புரட்சியாளர் ஆவார். உண்மையான வீரனாக வாழ்ந்து, நாட்டிற்காகப் போராடி மடிந்து போனதால், இவர் 'சாஹீது (மாவீரன்) பகத்சிங்' என அழைக்கப்பட்டார். ஆங்கில ஆட்சியை வெளியேற்றி, இந்தியாவை சுதந்திர நாடாக்க ஆயுதமேந்தி போராடிய புரட்சி அமைப்பான "இந்துஸ்தான் சோசலிசக் குடியரசு" அமைப்பின் தலைவர்களுள் ஒருவர் ஆவார்.

1919 ஆம் ஆண்டு, இந்தியாவின் அம்ரித்சர் நகரில் ஜாலியன் வாலாபாக் என்ற இடத்தில், ஆயுதம் ஏதுமின்றி கூட்டத்தில் பேச்சை கேட்டுக்கொண்டிருந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என பாராமல், ஆங்கில அரசு, 'ரெஜினால்ட் டையர்' என்ற இராணுவ அதிகாரியன் தலைமையில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது. அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதலைக் கண்டு நாடே கொதித்தது. இந்த கொடூரமான படுகொலை, பகத்சிங்கின் மனதில் பெரும் மாற்றத்தையும் விதைத்ததோடு மட்டுமல்லாமல், இரத்தம் படிந்த மண்ணை ஒரு புட்டியில் அடைத்து எடுத்துவந்து தன்னுடன் வைத்துக்கொண்டு, அவர் வெள்ளையர்களை விரட்ட சபதமும் பூண்டார்.

1924 ஆம் ஆண்டு, சச்சீந்திரநாத் சன்யால் என்பவரால் தொடங்கப்பட்ட "இந்துஸ்தான் குடியரசுக் கழகம்" என்னும் அமைப்பில் இணைந்தார். பிறகு 1926 இல் பகத்சிங், சுகதேவ், பவதிசரண் வேரா, எஷ்பால் போன்றோர் இணைந்து "நவ்ஜவான் பாரத் சபா" என்ற இளைஞர் அமைப்பை நிறுவினர்.

1928 ஆம் ஆண்டு, "சைமன் கமிஷனை" எதிர்த்து காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபட்டபோது, அந்த போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர் லாலா லஜபதிராய் பொலிஸாரால் தடியடிப்பட்டு இறந்தார். இதனால் கோபம்முற்ற பகத்சிங்கும், ராஜகுருவும் இணைந்து, லாலா லஜபதிராய் இறப்புக்கு காரணமாயிருந்த காவலதிகாரியான சாண்டர்ஸை சுட்டுக் கொன்றுவிட்டு தலைமறைவாகினர்.

1929 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி, சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட பொழுது, குண்டுகளை வீசினர். இதனால் பகத்சிங், ராஜகுரு மற்றும் சுகதேவ் ஆகிய மூன்று பேரும் குண்டு வீசிய வழக்கில் கைதுசெய்யப்பட்டனர்.

சென்ட்ரல் அசெம்பிளி ஹாலில் வெடிகுண்டு வீசியது மற்றும் துண்டு பிரசாரம் போட்டு "இன்குலாப் ஜிந்தாபாத்" என்று முழக்கமிட்டு தானே சரணடைந்த பின்னர், காங்கிரஸ் தலைவர் லாலா லஜபதிராய் என்பவரின் இறப்புக்கு காரணமாயிருந்த காவலதிகாரியை சுட்டுக்கொன்ற குற்றத்திற்காக தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், ராஜகுரு, மற்றும் சுகதேவ் ஆகியோர் ஆங்கில அரசின் 24 ஆவது அகவையில் 1931 ஆம் ஆண்டு, மார்ச் 23 ஆம் திகதி தூக்கிலிடப்பட்டார்கள்.

ஒரு போராளியின் வாழ்க்கை என்பது வெறும் சரித்திரம் மட்டுமல்ல, அது ஒரு பாடமும் கூட. இன்றைய இந்தியாவில் எத்தனையோ இளைஞர்களுக்கு முன்மாதிரியாக விளங்கும் பகத்சிங் வாழ்க்கை போற்றத்தக்க ஒன்றாகும். விடுதலைப் போராட்ட உணர்வுகளை இளைஞர்கள் மனதில் விதைத்திட, தன் மரணத்தையே பரிசாகத் தந்த மாபெரும் போராளி. வாழ்வதன் மூலமாக மட்டுமல்லாமல், இறப்பதன் மூலமாகவும் ஒரு சகாப்தத்தினை உருவாக்க முடியும் என வாழ்ந்து காட்டியவர். அவர் வாழ்ந்த வாழ்க்கைக் காலம் குறுகியது என்றாலும் நூற்றாண்டுகளைக் கடந்து சுமந்து நிற்கும்.

## 03.2015 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1752 - கனடாவின் முதலாவது பத்திரிகை த ஹலிஃபாக்ஸ் கசெட் வெளியிடப்பட்டது.
- 1801 - ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னன் வாள் ஒன்றினால் வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டான்.
- 1903 - ரைட் சகோதரர்கள் தமது வெற்றிகரமான முதலாவது வானூர்திக்கான காப்புரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்தனர்.
- 1919 - இத்தாலியின் மிலான் நகரில் முசோலினி தனது பாசிச அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார்.
- 1931 - இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களான பகத்சிங், ராஜ்குரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1933 - ஹிட்லர் ஜேர்மனியின் சர்வாதிகாரியானது ரெய்க்ஸ்டாக்கினால் சட்டபூர்வமாக்கப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: இந்தியப் பெருங்கடலில், அந்தமான் தீவுகளை ஜப்பானியர் கைப்பற்றினர்.
- 1956 - பாகிஸ்தான் உலகின் முதல் இஸ்லாமியக் குடியரசாகியது.
- 1965 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது இரு விண்வெளி வீரர்களைக் கொண்ட நாசாவின் ஜெமினி 3 விண்கலம் ஏவப்பட்டது.
- 1966 - தனது முதல் கரந்தடி தாக்குதலில் சேகுவேராவின் அணி வெற்றிகரமாக பொலிவிய இராணுவப்பிரிவை தோற்கடித்தது.
- 1982 - குவாத்தமாலாவின் பெர்னாண்டோ கார்சியா தலைமையிலான அரசு இராணுவப் புரட்சி ஒன்றில் கவிழ்ந்தது.
- 1998 - டைட்டானிக் திரைப்படம் 11 ஆஸ்கார் விருதுகளை வென்றது.
- 2001 - ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையம் வளிமண்டலத்தில் வெடித்து, பீஜியின் அருகில் தெற்கு பசுபிக் பெருங்கடலில் வீழ்ந்தது.

**பிறப்புக்கள்**

- 1858 - லூட்விக் குயிட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1941)
- 1881 - ரொஜர் டு கார்ட், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (இ. 1958)
- 1881 - ஹேர்மன் ஸ்டீடிஞ்சர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1965)
- 1893 - ஜி. டி. நாயுடு, தமிழக விவசாய அறிவியலாளர்
- 1907 - டானியல் போவெட், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1992)

**இறப்புக்கள்**

- **1931 - பகத்சிங், இந்திய சுதந்திரப் போராட்ட வீரன் (பி. 1907)**
- 1964 - யோக சுவாமிகள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சித்தர் (பி. 1872)
- 1992 - பிரீடெரிக் ஹயெக், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1899)

**சிறப்பு தினம்**

- உலக வானிலை தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

...வீபூதி பூசிக்கொள்வதை வைத்து, என்னை இந்து என்று கூறுவதில் அர்த்தம் இல்லை. என்னுடைய கடவுளுக்கு மதம் கிடையாது" என்று ரஜினிகாந்த் கூறினார்.


ஆன்மீகம் பற்றியும், தனது விருப்பு வெறுப்புகள் குறித்தும் தன்னுடைய கருத்துக்களை ரஜினிகாந்த் பல்வேறு சந்தர்ப் பங்களில் கட்டுரைகளிலும், பேட்டிகளிலும் தெரிவித்திருக்கிறார்.

அவர் கூறியிருப்பதாவது:-

**சந்தேகம்**

"சின்ன வயசிலே ஆன்மீக த்திலே எனக்கு நிறைய சந்தேக ங்கள் வரும். அப்போதெல்லாம் அந்த சந்தேகங்களை என் அப் பாக்கிட்டே சொல்லி விளக்கம் கேட்பேன்.

"எல்லோருமே மனுஷங்க தானே? அப்புறம் உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதின்னு பேதம் ஏது? இந்தப் பழக்கம் ஏன் வந்துச்சு... தேவையா...? அது ஏன்...? இது ஏன்...?" இப்படி நிறைய கேள்வி களை அப்பாக்கிட்டே கேட்பேன். அப்பாவும் பதில் சொல்லுவாரு. ஆனா அந்தப் பதில்களிலே எனக்கு திருப்தியிருக்காது. அப் பாக்கிட்டே மட்டுமில்லாம பெரிய அண்ணன்கிட்டே, அக்காகிட்டே... இப்படி எல்லார்கிட்டேயும் நான் இந்த மாதிரியான கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தேன். அவங்க பதில்களிலே எனக்கு திருப்தி






ராகவேந்திரராக ரஜினி

கிடைக்கவில்லை.

**சாமிக்கு லஞ்சம்**

வீட்டிலே அடிக்கடி கோவிலு க்குப்போய் வருவாங்க. "இன்னது பண்ணினா இன்னது செய்வேன்"னு சொல்லி சாமிக்கு நேர்த்தி வைப் பாங்க. அது, அது நடந்தா உடனே அந்த நேர்த்தியை "பயபக்தி" யோட செய்வாங்க. என்னடா இது சாமிக்கே "லஞ்சம்" கொடுக்கிறாப் பல இருக்கேன்னு நான் யோசிப்பேன். அவங்க கிட்டே கேட்கவும் செய் வேன்.

அவங்க "அது... அது... அப்படித தாண்டா... காரணம் கேட்காதே..." என்று சொல்லுவாங்க. மதம் சம்பந்தமா... கடவுள் சம்பந்தமா... சமுதாயம் சம்பந்தமா... நான் கேள்வி கேட்கிறப்ப எல்லாம் இதே பாணி பதில்தான்.

என் கேள்விகளுக்கு வீட்டிலே யாராலும் சரியா பதில் சொல்ல முடியலே. ஆனா... நான்பாட்டுக் குக் கேள்விகள் கேட்டுக்கிட்டே இருந்தேன்.

"உன்னோட கேள்விக்கெல் லாம் சரியான பதில் கிடைக்கிற இடத்திலே உன்னைச் சேர்த்து விடறேன்னு சொல்லி, என்னைக் கூட்டிட்டுப்போய் ராமகிருஷ்ணா ஆசிரமப் பள்ளியிலே பெரிய அண்ணன் சேர்த்துட்டாங்க.

ஆசிரமப் பள்ளியிலே சேர்ந்த துக்கு அப்புறம்தான் நான் படிப்படி யாக ஆன்மீகவாதியா மாற ஆரம் பிச்சேன்.

முன்னாடி கஷ்டத்தை, கஷ்ட மாகவே பார்த்து வந்த எனக்குப் பெரிய பெரிய கஷ்டங்களைக்கூட சுலபமா ஏத்துக்கிற பக்குவம் வந்தாச்சு. ஆமா... எல்லாத்தை யுமே ஈசியா எடுத்துக்கிட்டேன்.

"இந்த உலகத்துலே எதுவும் சாஸ்வதம் இல்லை. நாம இப்ப அனுபவிச்சுக்கிட்டிருக்கிற சொத்து, சுகம், பதவி, பந்தம், பாசம்... ஏன் இந்த உடம்பே சாஸ்வதம் கிடை யாது அப்படீங்கிற ஞானம் அப்ப த்தான் எனக்கு வந்துச்சு.

அதனாலதான் யாராச்சும் என் வயசைப்பற்றி கேட்கறப்போ, "என்னோட உடம்புக்கு இத் தனை வயசு" ன்னு சொல்றேன். 1950 இல் பொறந்த உடம்பு இது. உடம்புக்குத்தான் வயசு, என க்கு வயசு கிடையாது. அதாவது ஆத்மாவுக்கு வயசேது?

**அசைவ உணவு**

"ஆன்மீகவாதி என்று சொல் லிக்கொள்ளும் நீங்கள் அசைவ உணவு சாப்பிடலாமா?" என்று சிலர் என்னிடம் கேட்கிறாங்க.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 97

...நல்ல நாள்லயே சொல்லு சொந்தமில்ல அவனுக்கு. நெஞ்சில முள்ளுத் தச்சு நெலகொலஞ்சு அழுகிறவன் என்னத்தச் சொல்லப் போறான் பாவம்.

ஏலே! கால விடுறா; கண்ணத் தொடச்சுக்கடா; எந்திர்றா; என்னாச் சுன்னு சொல்றா;

மண்ணுல மூஞ்சியத் தேச்சுக்கி ட்டே அழுது சொல்லுது அந்த அரைப்பெறவி.

அவுக ஆ.... ஆ... ஆத்தா பட்ட கடனுக்கு அய்யக்காவக் க.... க.... க.... கல்யாணம் பண்ணிக்கிட்டான் எ... எ.... எ.... எங்கப்பன். எனக்கு சா... சா... சாக தைரியம் இல்ல ஆத்தா. ஓ... ஓ... ஓடியாந்துட்டேன். என் கட்ட வேகுமட்டும் ஒங்காலடிய விட்டுப் போ... போ... போ... போகமாட்டனத்தா! இ... இ... இ... இருந்தாச் சோறு. செ... செ... செத்தா வாய்க்கரிசி போடுவியா?

ஆத்தா செத்தன்னைக்கிக் கூட அழுகாத கருவாச்சி அன்னைக்கி அழுதா.

கொட்டிக் கெடந்தவனக் குனிஞ்சு அள்ளுனா.

நீதான்டா எம் மூத்த மகன். கால மெல்லாம் ஒனக்குக் கஞ்சி ஊத்து றண்டா! நான் செத்தா நீ தூக்கிப் போடு; நீ செத்தா நான் தூக்கிப் போடு றேன்; அழுகாதடா.

அவன் கொண்டு வந்த பை மேல கோழி ஒண்ணு தவ்விப்போனதுல



க்ளிங் க்ளிங் ன்னு சத்தம் போடுது ஒடைஞ்சு போன ஒரு வளவி.

என்னிய எடுத்துக் கண்ணத் தொடச் சுக்கன்னு எட்டிப்பாக்குது பைக்கு வெளிய மூஞ்சியத் தொங்கப்போட்ட மஞ்சச் சீல.

வாசத் தொளிக்கிற வரைக்கும் காத்திருக்குமா? விடிஞ்சிருச்சுபொழுது.

சீ... சீ....சீ.. சின்னத்தா.... கெ.... கெ.... கெ... கெடைய விட்டு ஓ.... ஓ.... ஓ..... ஒதுங்கி வந்துருச்சு... ஒரு கெ... கெ.... கெ... கெடாக் குட்டி. வீ..... வீ..... வீ.... வீட்டுக்கு எடுத்துட்டு வந்துட்டேன்.

பிள்ளையத் தூக்கிவச்சிருக்கிற தாய் மாதிரி நெஞ்சுல சொமந்து கொண்டாந்த செம்பிலி ஆட்டங் குட்டியக் கொண்ணவாயன் தாங்கித் தரையில எறக்கி விடவும் புது எடத் தச் செத்தவடம் வெறிச்சு வெறிச்சுப் பாத்த குட்டி மளார்ன்னு ஒரு தவ்வுத் தவ்வி மான் குட்டி மாதிரி ஓடுது.

பிள்ளைக்கு ஒரு பக்க மார ஒதுக் குப் பால் குடுத்துக்கிட்டிருந்த கரு வாச்சி, பிள்ளையப் பிரிச்சு மாரை ஒழுங்கு பண்ணிக்கிட்டே புடி புடி புடின்னு ஓடி வாரா பிள்ளையத் தூக்கிட்டே.


தவ்விஓடிக் காடிக்குள்ள விழுந்து போன கெடாக்குட்டியக் கொண்ண வாயன் புடிச்சுத் தூக்கி வரவும் புடிக்கி அடங்காம அவன் கையவிட்டு ஒழு குது கழுத. கைத்தாங்கலாக் கருவாச்சி கிட்ட எறக்கிவிட்டுட்டுப் பின்னங் கால் ரெண்டையும் புடிச்சு உக்கார் றான் கொண்ணவாயன்.

குட்டியத் தொட்டுத் தொட்டுப் பாக் குறா கருவாச்சி. தலையத் தடவுறா. தாடைய உருவுறா. எளங்காது ரெண் டையும் வருடி வருடிப் பாக்குறா. வெற்ற வெளேர்ன்னு இருக்கு தோலு. பளிங்காங் குண்டுக மாதிரி மினுக் மினுக்குன்னு மின்னுதுக கண்ணுக ரெண்டும். ரெண்டு நாளோ மூணு நாளோதான் இருக்கும் குட்டி பெறந்து. பெறந்த பிள்ளையக் கழுவித் தொடச்சு வெயில்ல காய வச்சமாதிரியே இருக்கு குட்டி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவு கடற்படையின் தளமாவதை வடமாகாண சபை தடுக்க வேண்டும்




**வடமாகாண சபைக்கே கச்சதீவு சொந்தமானது**

1974, 1976 ஆம் ஆண்டுகளில் இலங்கை - இந்திய உடன்படிக்கையின் பிரகாரம் கச்சதீவு இலங்கைக்குரியதாயிற்று. மத்திய அரசின் வஞ்சக ஒப்பந்த மூலமே இத்தீவு இலங்கைக்குரியதாயிற்று எனவும் அது தமிழ்நாட்டிற்குரியது எனவும், தமிழக அரசு பல தசாப்தங்களாக குமுறி வருகிறது.

இத்தீவு தமிழகம் தனக்குரியது எனவும் இலங்கை தனக்குரியது எனவும் பல வருடங்களாக விவாதப் போர் நடத்திக் கொண்டிருக்கிறது. ஆயினும் இத்தீவு நிர்வாக ரீதியில் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டதாக தேசப்படத்தில் காட்டப்படுவதாலும், வடக்கிலுள்ள தீவுகள் வடமாகாண சபையினுள் அடங்குவதாலும், இத்தீவு வடமாகாண சபைக்குரியதாகிறது.

ஆகவே இத்தீவு வடமாகாண சபைக்குச் சொந்தமானது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். தமிழக அரசு இத்தீவினைக் கையகப்படுத்தும் முயற்சியினை மறுபரிசீலனை செய்ய விரும்புகிறோம்.

மனித சஞ்சாரமற்ற இத்தீவு இந்திய தமிழகத்திற்கும் யாழ் தீவ கத்திற்கும் இடையில் கேந்திர. முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இடவமைவு பெற்று இருக்கின்றது.

இத்தீவு இலங்கைக்கு சொந்தமாகியதில் இருந்து வருடாந்தம் மார்ச் மாதத்தில் யாழ்ப்பாணம் கத்தோலிக்க மத நிர்வாகம் புனித அந்தோனியார் திருவிழாவை நடத்தி வருகின்றது.

தமிழக யாத்திரிகர்களும் திருவிழாக் காலங்களில் இங்கு வந்து போக அனுமதிக்கப்படுகின்றனர். திருவிழா காலந்தவிர்ந்த ஏனைய தினங்களில் இத்தீவை மக்கள் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பு என்று கூறி இலங்கை அரசு இதனை கண்காணித்து வருகின்றது.

யுத்தம் முடிவுற்று ஐந்து வருடங்கள் கழிந்து விட்டன. இன்னும் தேசிய பாதுகாப்பு என்று குதர்க்கம் பேசி சில இடங்களில் இருந்து படைகளை விலக்குவதில் தயக்கம் காட்டி வருகின்றது இலங்கைப் படைத்தரப்பு. கச்சதீவுக்கும் இது பொருந்தும். இருக்கின்ற இடங்களில் எவ்வளவு விரைவில் பௌத்த விகாரைகளையும் தூபிகளையும் நிறுவ முடியுமோ அவ்வளவு விரைவாக இழிவுத்தனமான வேலையில் இறங்கியிருக்கிறது படைத்தரப்பு. கச்சதீவும் இதற்கு இலக்காகலாம்.

மூன்று கிலோமீற்றர் நீளத்தையும் சிறிய பரப்பளவையும் கொண்ட கச்சதீவு சூழவர முருகைக்கற் பாறைகளையும் கடற்தாவரங்களையும் செழிப்பாகக் கொண்டுள்ள ஓர் அழகிய தீவாகும். இதன் சுற்றாடலில் உள்ள கடல் வளங்கள் மிகச் செழிப்பு மிக்கவை.

அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்றிமை pink gold எனப்படும் இறால் வகை, சிங்க இறால், கடலட்டை, சங்கு, கணவாய், நண்டு இவைகளுடன் சிறிய ரக மீன் வகைகளும் செழிப்பாக வளரும் சூழலைக் கொண்ட ஒரு பகுதியாகும். இப்பகுதியே இன்று தமிழக மீனவர்களின் வேட்டைக் காடாக மாறிப் போயிருக்கிறது. வடமாகாண சபை முதல்வர் கூறியது போன்று இப்பகுதியில் இந்திய இழுவை படகுகள் தடை செய்யப்பட்ட இழுவை மடிகளை பயன்படுத்தி வளங்களை நிர்மூலமாக்கிக் கொள்வதை நிறுத்துதல் மிக அவசியம்.

தமிழக அரசும் மத்திய அரசும் நொந்துபோயிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு ஏதாவது ஒரு சிறிய நன்மை செய்ய விரும்பின் வடபகுதிக் கடற்பரப்பில் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துவதோடு கச்சதீவினையும் அதன் சுற்றாடலையும் வடமாகாணசபை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்குதல் வேண்டும். இது இந்திய- இலங்கை மீனவர் விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர அடித்தளமாக அமையலாம்.

**கடற்பூங்கா Marine park**

இத்தீவையும் இதன் சுற்றாடலையும் வடமாகாணசபை கடல் பூங்காவாக (Marine Park) பிரகடனப்படுத்துதல் வேண்டும். வடபகுதியில் கடல்வளங்களை பாதுகாக்கவென எந்தவொரு கடல் பூங்காக்களும் இல்லை.

ஆகவே இத்தீவையும் இதன் 2km சுற்றாடல் பகுதிகளையும் கடல் பூங்காவாக பிரகடனப்படுத்தி தீவையும் சுற்றாடல் கடல்வளங்களையும் பாதுகாப்பது அவசியமாகும்.

இப்பகுதியில் கடல் ஆய்வுகளை மேற்கொள்வதுடன் எதிர்காலத்தில் சுற்றுலா மையங்களுள் ஒன்றாக இதனை பயன்படுத்துவதன் மூலம் வேலைவாய்ப்பினையும் வருமானத்தையும் ஈட்டிக் கொள்ளமுடியும்.

இதன்மூலம் வடபகுதிக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே பயனுடையதாக அமையும். ஆகவே இலங்கை அரசு கச்சதீவுப் பகுதியினை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென விரும்புகின்றோம்.


இந்த வகையில் வடமாகாண சபையும், மீன்பிடி, சுற்றாடல் அமைச்சு, யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் வடபகுதி கடற்றொழில் திணைக்களமும் இணைந்து இத்தீவின் எதிர்கால பயன்பாடு பற்றி சிந்திப்பது நல்லது. நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவும் இத்தீவு தொடர்பாக விழிப்புடன் செயற்படுவது அவசியம்.

**இத்தீவினை வடமாகாண சபை பயன்படுத்த தவறின் இலங்கையின் தேசிய தீவாகவும் கடற்படைத்தளமாகவும் இதனூடாக இத்தீவு பௌத்த பூமியாகவும் மாற இடமுண்டு.**

**பேராசிரியர் ஏ.எஸ்.சூசை**

## உக்ரைன் பிரிவினைவாதிகளுக்கு ஆயுதங்களை விநியோகித்தாராம்

### முன்னாள் இலங்கைத் தூதுவர் மீது குற்றச்சாட்டு



ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க மீது உக்ரைன் அரசாங்கம் குற்றசசாட்டை சுமத்தியுள்ளது.

உதயங்க, உக்ரைனின் பிரிவனைவாதிகளுக்கு ஆயுத விநியோகப் பணிகளில் ஈடுபட்டார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான குற்றச்சாட்டை உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ, இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சரிடம் முன்வைத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் முழுமையான விசாரணைகள் நடத்தப்படும் என்று வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் குற்றச்சாட்டின்படி உதயங்க, பிரிவினைவாதிகளுக்கு துப்பாக்கிகள் மற்றும் சிறிய ரக ஆயுதங்களை விநியோகித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் தலைநகர் கீவ்வில் உதயங்க வீரதுங்க தங்கியிருந்தார். அத்துடன் கிளப் லங்க என்ற விருந்தகத்துக்கும் உரிமையாளராக இருந்தார்.

வீரதுங்க, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மருமகன் என்ற வகையிலேயே உக்ரைனுக்கான தூதுவர் நியமனம் வழங்கப்பட்டது.

இந்தநிலையில் அரசியல் நியமனம் என்ற அடிப்படையில் அவர் புதிய அரசாங்கத்தினால் மீண்டும் இலங்கைக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தேசிய கீதத்தை தமிழிலும் இசைக்க அனுமதியுங்கள்!

### நாடாளுமன்றில் வாசுதேவ கோரிக்கை

தேசிய கீதத்தை தமிழ்மொழியில் இசைக்க அரசமைப்பில் எந்தத் தடையும் இல்லை என்று தெரிவித்த முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார, தேசிய கீதத்தை தமிழ்மொழியில் இசைக்க அனுமதிக்காவிட்டால் நாடு பேரழிவைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது தேசிய கீதத்தை தமிழில் இசைப்பது தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைகளின்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதை சவாலுக்கு உட்படுத்தவோ, தலைகீழாக மாற்றவோ முடியாது. அரசமைப்பில், "ஸ்ரீலங்கா மாதா......." என்று கூறப்பட்டுள்ள தேசிய கீதத்தை தமிழர்கள், "ஸ்ரீலங்கா தாயே......" என்று தமிழ்மொழியில் இசைக்கின்றனர்.

அரசமைப்பின் 205ஆம் பக்கத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரே அர்த்தத்தில் இரண்டு மொழிகளிலும் பாடப்படுகின்றது. சிங்களத்தில் உள்ளதை அதேபோன்று தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நாம் "மாதா...." என்றதை தமிழர்கள் "தாயே..." என்று கூறுகின்றனர்.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தமிழிலும், சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் சிங்களத்திலும் மட்டுமே இசைக்கப்படுகிறது.

இதனால் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுவிட்டதாகத் தமிழர்கள் கருதிவிட முடியாது. இரண்டு தடவைகள் தேசிய கீதத்தைப் பாட முடியாது. எனவே, ஆபிரிக்காவில் உள்ளதுபோல இருமொழிகளிலும் இணைத்து தேசிய கீதத்தைப் பாடவேண்டும் என்ற யோசனையை நான் முன்வைத்தேன். அதை எவரும் கருத்தில் கொள்ளவில்லை.

சிங்களம், தமிழ் கலந்த தேசிய கீதத்தை இணைத்து நாம் இசைக்கலாம். தமிழில் தேசிய கீதம் இசைப்பதற்கு அரசமைப்பில் எந்தத் தடையும் இல்லை. எனவே, இதை அறியாது செயற்பட்டால் நாடு பாரிய பேரழிவைச் சந்திக்க நேரிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோ.நாடுகளின் ஒத்துழைப்பு இலங்கைக்குக் கிடைத்துள்ளது

## ஜனாதிபதி பெருமிதம்

(கொழும்பு)

வலய நாடுகள் மாத்திரமன்றி, அனைத்து ஐரோப்பிய நாடுகளினதும் ஒத்துழைப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்த நாடுகள் புதிய அரசாங்கத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை, நாட்டு மக்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கும் சர்வதேசத்திற்கு இடையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரிவினையை, புதிய அரசாங்கம் நிறைவு செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலனறுவை வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட புதிய குருதி மத்திய நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு, உலக நாடுகள் சில, கடந்த காலங்களில் ஆதரவுகளை வழங்கி வந்ததாகவும் இந்த நிகழ்வின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நினைவுபடுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புதிய ஆட்சி முறையில் முன்னேற்றம்

ஆரோக்கியமான குழந்தைகளின் எதிர்காலத்தை உருவாக்குவதற்கு, தாய்மாருக்கு போசாக்கு அவசியம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையிலேயே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அதேவேளை பழைய ஆட்சியை போன்று, அநாவசியமான தர்க்கங்களை ஏற்படுத்திக் கொள்ளாமல், புதிய ஆட்சி முறையின் கீழ் எதிர்காலத்தை நோக்கி முன்னேற வேண்டும் என்று அவர தெரிவித்துள்ளார். தற்போது தீர்மானிக்க வேண்டிய விடயம் இரண்டு உள்ளன. பழைய ஆட்சியின் கீழ் பின்னடைவை சந்திப்பதா? புதிய ஆட்சியின்கீழ் முன்னேறி செல்வதா? என்பதே.

கடந்த அரசாங்கம் பாரிய ஊழல்களை மேற்கொண்டு, நாட்டை சீரழித்துள்ளது.

இந்த ஊழல்களை வெளிக் கொணரவும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பிரதமர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 50 | 60 | 70-80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 | 80 | 60 | 60 |
| தக்காளி | 50 | 40 | 40 | 60 | 30 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | — | 40 | 40 |
| கோவா | 50 | 30 | 40 | 60 | 30 | 40 |
| கரட் | 200 | 120 | 90 | 120 | 80-100 | 120 |
| பூசணி | 50 | 60 | 50 | 80 | 60 | 60 |
| புடோல் | 50 | 50 | 40 | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 80 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 60 | 80 | 50 | 50 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 100 | 80-90 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 70 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 100 | 30-40 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 50 | 60 | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 80 | 70-80 | 80 |
| லீக்ஸ் | 200 | 140 | 150 | 200 | 160 | 150 |
| பீற்றூட் | 40 | 60 | 70 | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 200 | 150 | 100 | 120 | 120-140 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 320 | 200-300 | 400 |
| போஞ்சி | 200 | 120 | 100 | 160 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 30 | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 30 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 60 | 40 | 60 | 60 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 50 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 100 | 100 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 140 | 100 | 160 | 80 | 80 |
| முள்ளங்கி | 20 | 20 | 40 | 80 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 20 | 10 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 319

அகன்யா சிவஞானம்

வட்டம் போட்டு வாழ்வது அல்ல வாழ்க்கை.
நேரத்திற்கு ஏற்றாற் போல் திட்டம் போட்டு வாழ்வது தான் சிறந்த வாழ்க்கை..!

மெரினா அந்தோனிப்பிள்ளை




பரீணா அல்பிரட்

மகள் : அப்பா கணக்கு பாடத்துக்கு ரியூசன் ஏற்பாடு பண்ணச் சொல்லி ரீச்சர் சொன்னார்.

தந்தை : நான் தான் சொல்லித் தாரேன்ல...



மகள் : உங்களுக்குத் தான் ரியூசன் ஏற்பாடு பண்ணச் சொன்னா ரீச்சர். கோம்வேர்க் தப்புத் தப்பா சொல்லித்தாறீங்களாம்.

அகல்யா சிவஞானம்




துசா துசானி

வயதான தந்தை ஒரு குருவியை பார்த்து என்னவென்று தெரியாமல் மகனிடம் கேட்டார் அது என்னடா?
அது குருவி அப்பா
சிறிது நேரத்தில் மறந்தவனாய் மீண்டும் கேட்டார்.மீண்டும் அது குருவியென மகன் மறுமொழி கூறினான்.
கொஞ்ச நேரத்தில் மூன்றாவது முறை கேட்ட தந்தையை கண்டு எரிச்சலுற்ற அவன் இதோட மூன்றாவது முறை கேட்கிறீங்க..நான் தான் சொன்னேனே அது குருவி என்று கூறினான்.தந்தை மெல்லியதாக புன்னகை செய்தார்.பிறகு சொன்னார்.
நான் மூன்று முறை கேட்டதுக்கு என்னை வெறுக்கிறாய். நீ குழந்தையாக இருக்கும் போது இதையே 100 முறைக்கு மேல் கேட்டிருக்கிறாய்.ஆனால் நான் ஒரு முறை கூட எரிச்சல் கொள்ளவில்லை என்றார்.
அதைக் கேட்டதும் மகன் மௌனமானான்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறந்தாரா...? மறுத்தாரா...? மறுக்கப்பட்டாரா...?



பாரதத்தின் பிரதமராம் நரேந்திரமோடியின் விஜயம் தொடர்பில் இலங்கையின் அனைத்து தமிழ் ஊடகங்களும் வரிந்து கட்டிக்கொண்டு முக்கியத்துவம் கொடுத்து முன்னிலைப்படுத்தி புகழ்ந்து பாராட்டி புளகாங்கிதம் கொண்டிருந்தன.

ஆனாலும் சிங்கள ஊடகங்களோ சிங்கள சமூகத்தையே மருவி நிற்கின்ற ஆங்கில ஊடகங்களோ மோடியின் வருகை தொடர்பில் பெரிதாக அலட்டிக் கொண்டதாக தெரியவில்லை.

சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் எவ்வாறு மோடியின் இலங்கை விஜயத்தை அலட்டிக்கொள்ளாது புறக்கணித்த போக்கில் செயலாற்றியிருந்தனவோ அதே போக்கில் பிரதமர மோடியின் செயற்றிட்டங்களும் அமைந்து விட்டன. இது மறுக்க முடியாது அத்துடன் தாளாத செயற்பாடாகவும் அமைந்துவிட்டது.

தொப்புள்கொடி உறவு என்று பேசப்படுகிறது. கட்டுரைகளிலும் கவிதைகளிலும் வழங்கப்படுகின்றன. அதாவது, இந்தியாவின் தொப்புள் கொடி உறவுகளான மலையக சமூகம் விளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு விளிக்கப்படுவதில் அர்த்தம் இல்லாமலுமில்லை. தோட்டத் தொழிலாளர்கள் எனும் கீழ் நிலை அந்தஸ்துக்குள் மட்டுமே வரையறுத்து நோக்கப்படுகின்ற மலையக சமூகம் இந்திய வம்சாவளியினர் என்று அழைக்கப்பட்டு வருவதன் அர்த்தமானது அந்த சமூகம் இந்திய நாட்டுக்கு சொந்தமானவர்கள் என்பதையே கோடிட்டுக் காட்டி நிற்கின்றது.

இவ்வாறு இந்தியாவுக்கு சொந்தமானவர்கள் என்றதொரு சமூகத்தின்பால் சிந்திக்கத் தவறியிருப்பது சகித்துக்கொள்ள முடியாத பாதகமான செயல் என்றே கூறத் தோன்றுகிறது. இந்தியாவின் நோக்கில் இலங்கைத் தமிழர் என்றதொரு பார்வையே இருந்து வருகின்றது. எனினும் இங்கு வடக்கு, கிழக்குப்பிரச்சினைகளை மையப்படுத்திய விவகாரம் இன்று சர்வதேசத்தின் முன்னிலையில் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளதன் காரணத்தால் இலங்கைத் தமிழர் என்றதும் வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நெருக்குவாரங்களுக்கு உட்பட்ட இடம்பெயர்ந்த மக்களை மட்டுமே குறித்து நிற்கின்றது.

எனினும் மலையகத்திலும் தமிழ் மக்கள்தான் வாழ்ந்து வருகின்றனர் என்ற விடயம் இங்கு பேசப்படுவதாகவோ அல்லது அலட்டிக்கொள்ளப்படுவதாகவோ இல்லை. வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினை வேறு மலையகத்தமிழ் மக்களின் பிரச்சினைகள் வேறு. இந்த இரு பகுதியினரதும் பிரச்சினைகள் தேவைப்பாடுகள் அபிலாஷைகள் எதிர்பார்ப்புக்கள் உள்ளிட்டவற்றை ஒன்றுபடுத்தி பேசுவது ஏற்கத் தகாத, முடியாத விடயமாகும்.

இருந்த போதிலும் தமிழ் மக்கள் எனும் பதத்தோடு இணைத்து அணுகும் போது இவ்விரு சாராரும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவர்களேயன்றி ஒரு பகுதியினரை ஏற்று மறு பகுதியினரை புறக்கணித்து செயற்படுவது நேர்மைத்தன்மை வாய்ந்ததாக அமையாது.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் அவசர அவசிய தேவைப்பாடுகளை கண்டறிந்து அவற்றுக்குத் தீர்வினைக்காண்பதை முதற்படியாக செயற்படுத்துவதை விடுத்து பசித்திருப்பவனைக் கொண்டு பொதி சுமக்க வைத்த கதையாக இன்று அந்த மக்களின் நிலைமை மாறியிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல்வாதிகள் அரசியல் செய்வதற்கு அந்த மக்கள் பயன்படுத்தப்படுவது போன்று மலையகத் தலைமைகள் தமது அரசியலை செய்வதற்கு தோட்டத் தொழிலாளர்களை பயன்படுத்தி வருகின்றனர். இதனை இன்னும் ஆழமாக சொல்ல வேண்டிய தேவை இங்கில்லை.

இந்திய பிரதமரின் இலங்கை விஜயத்திற்கு முன்பதாக இங்கு வாழ் தமிழ் மக்களிடத்திலும் தமிழ் அரசியல் வாதிகளிடத்திலும் எதிர்பார்ப்புக்கள் நூறு மடங்காக அதிகரித்திருந்தன. எனினும மலையகமே முகம் மலர்ந்து பூரித்து மோடியின் வரவுக்காய் காத்திருந்ததை எப்படித்தான் வர்ணித்துக்கூறுவது என்பது புரியவில்லை.

இலங்கை மண்ணில் காலடி வைத்த மோடி வடக்கு, தெற்கு என்று பறந்தார். ஆனாலும் இயற்கையின் எழிலோடு கலந்து கம்பீரமாய் காட்சியளிக்கும் மலையகத்துக்கு சென்று திரும்புவதற்கோ அல்லது அத்தனை எழிலுக்கு மத்தியிலும் நெற்றி வியர்வை சிந்தி உழைத்துக் கொண்டிருக்கும் உண்மையான தொழிலாளர் வர்க்கம் என அழைக்கப்படுகின்ற ஒரு சமூகத்தை நேரில் பார்ப்பதற்கோ ஒரு மணி நேரத்தை ஒதுக்கித்தர முடியாதவராக மோடி ஆகி விட்டார்.

மோடியின் இலங்கை விஜயத்தின் போது அவர் மலையகத்தை மறந்தரா? மலையகத்தை மறுத்தாரா? அல்லது மலையகம் அவருக்கு மறுக்கப்பட்டதா? என்றதான கேள்விகளும் எழாமல் இல்லை.

கிராமம் ஒன்றே இல்லாது போன மீரியபெத்தைக்கும், இந்திய உதவியோடு நிர்மாணிக்கப்பட்டு வரும் கிளாங்கன் வைத்தியசாலைக்கும், மாத்தளைக்கும் மோடி விஜயம் மேற்கொள்வார் என்றிருந்த வேளையில், இறுதியில் வெறுமையானது. மலையக சமூகத்தை பரிதாபத்துக்குள் ஆழ்த்தி விட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கே சவாலாக விளங்கும் ஆசியாவின் ஒரேயொரு நாடான இந்தியாவின் பிரதமர் என்ற அரச தலைவர் அண்டை நாட்டுக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்வாரேயானால் அது வரலாற்று முக்கியத்துவம் மிக்கதான ஒரு பகுதியாகும். அப்படியொரு விஜயத்தை மேற்கொண்ட மோடியின் வருகைக்கு முன்பதாகவே முன்னோடி செயற்பாடுகள் அரங்கேற்றப்பட்டு நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்பட்டு விடுகின்றன.

அந்த வகையில்தான் மோடியின் இலங்கை விஜயத்துக்கு முன்பதாக அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இலங்கைக்கு வருகை தந்ததுடன் மோடியின் வருகைக்கான ஏற்பாடுகளையும் ஒழுங்குபடுத்தல்களையும் மேற்கொண்டிருந்தார்.

இலங்கை வந்த மோடி தனது நாட்டுடன் தொடர்பும் உறவும் கொண்டுள்ள ஒரு சமூகத்தை பார்க்காது புறக்கணித்து சென்றுள்ளார் என்றால் அது ஏற்றுக் கொள்ள முடியாத விடயமாகும். புதிய அரசாங்கத்தின் மீதான இந்தியாவின் நல்லெண்ணத்தை விரிவுபடுத்தி கொள்வதற்கும் அதேநேரம் இந்தியாவின் மேலாதிக்கத்தை இலங்கையில் நிலைநிறுத்திக் கொள்வதற்குமான ஒரு விஜயமாக இவ்விஜயம் அமைந்திருக்கின்றது. இதில் பொதிந்துள்ள உள்நோக்கங்கள் குறித்து நாம் இந்த கட்டுரையுடன் அலட்டிக்கொண்டிருப்பதில் அர்த்தம் இருக்காது.

இருந்த போதிலும் நல்லதொரு சந்தர்ப்பம் இங்கு கைநழுவி போயுள்ளமைக்கு அரசியல்வாதிகளையும் நொந்து கொள்ள வேண்டியுள்ளது. அரசாங்கத்தின் நோக்கமானது வடக்கையும் தெற்கையும் இணைத்திருப்பதாகவும் தமிழ் மக்களுடனான உறவு பேணப்பட்டு வருவதாகவும் வெளியுலகுக்கு காட்டிக்கொள்ள வேண்டும் என்ற தேவையுடன் செயற்பட்டு சாதித்துக்கொண்டது.

அரசாங்கத்தின் இத்தகைய போக்குடன் முரண்டு பிடித்த வடக்கு அரசியல் காய்நகர்த்தலானது தமது சமூகத்தின் நிலைமைகளை எடுத்துரைப்பதற்கும் அரசியல் ரீதியிலான அபிலாஷைகளை எவ்வாறு அடைந்து கொள்வது என்பது தொடர்பிலும் மிகத்தெளிவாகவும் அதேநேரம் மிக இலகுவாகவும் அணுகி சாதித்து கொண்டுள்ளதை இங்கு கூறியாக வேண்டும்.

மோடி மலையகத்தை புறக்கணித்தாரா? மறந்தாரா? அல்லது மறுக்கப்பட்டரா? என்றெல்லாம் எழுகின்ற கேள்விகளுக்கு நாம் விடை தேட முனைவோமானால் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் எமது தலைமைகள் மீதே சுமத்த வேண்டியுள்ளது. (தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதத்தை சிங்களத்தில் மாத்திரமே பாட வேண்டுமாம்

## சரத் வீரசேகர சர்ச்சைப் பேச்சு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் எந்தவிதமான விளக்கமும் இல்லை எனவும் தேசிய கீதத்தை சிங்களத்தில் மாத்திரமே பாட வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தீவிர விசுவாசியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர சர்ச்சைக்குரிய கருத்தை முன்வைத்துள்ளார்.**

கொழும்பு வானொலி நிகழ்வொன்றில் நேற்று முன்தினம்கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய கீதம் சிங்கள மொழியில் மாத்திரம் பாடுவதனால் தமிழ் மக்களுக்கு தேசிய கீதம் தொடர்பான உணர்வு இல்லாமல் போய்விடும். இதனால் தமிழ்மொழியில் தேசிய கீதம் பாடினால் நாடு குறித்தும் தமிழ் மக்களுக்கு ஒரு உணர்வு ஏற்படுமென தெரிவிக்கிறார்கள். அது உண்மையா என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர், தமிழ் மக்களுக்கு நாடு, தேசிய கீதம் தொடர்பாக உணர்வு வர வேண்டுமென்றால் அவர்கள் தேசிய கீதத்தின் அர்த்தங்களை புரிந்து கொள்ள வேண்டும். சிங்கள மொழியில் பல முக்கியமான வார்த்தைகளைக் கொண்டு தேசிய கீதம் எழுதப்பட்டுள்ளது. எனவே அதனை வேறு மொழியில் மொழிபெயர்ப்பு செய்வது தவறாகும்.

தேசிய கீதத்தை தமிழில் பாட அனுமதிக்க முடியாதென முதலில் எதிர்ப்பு தெரிவித்தவர் மக்கள் விடுதலை முன்னணியின் சுனில் ஹந்துன்நெத்தி, அவரின் பெயரை நாங்கள் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பு செய்தால் சென்ட்ல் வுட் (Sandle wood) நெட்டி என எழுத முடியாது.

அதேபோல் தான் “ஸ்ரீலங்கா மாத்தா” என்பதை ஸ்ரீலங்கா தாயே என்று எப்படி கூற முடியும். ஸ்ரீலங்கா மாத்தா என்று தான் தமிழிலும் பாட வேண்டும்.

தேசிய கீதத்தை தமிழில் எழுதினாலும் அதன் உச்சரிப்பு சிங்கள மொழியில் தான் இருக்க வேண்டும். எனவே தேசிய கீதம் சிங்களத்தில் தான் பாட வேண்டும் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (இ-5)

# ஏனைய படைத்தளபதிகளுக்கு பீல்ட் மார்ஷல் பதவி வழங்கப்பட வேண்டியது இல்லை!

## அனோமா பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

ஏனைய படைத் தளபதிகளுக்கு பீல்ட் மார்ஷல் பதவி வழங்கப்பட வேண்டியதில்லை என முன்னாள் இராணுவத் தளபதியின் மனைவி அனோமா பொன்சேகா தெரிவித்துள்ளார்.



மரணத்திலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிய எனது கணவர் வடக்கு போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

போர் இடம்பெற்ற காலத்தில் கடமையாற்றிய ஏனைய படைத்தளபதிகள் பீல்ட் மார்ஷல் பதவி கேட்பது பொருத்தமற்றது.

எனது கணவர் எதிர்நோக்கிய சவால்களை ஏனைய படைத் தளபதிகள் எதிர்நோக்கவில்லை.

பீல்ட் மார்ஷல் பதவியை பெற்றுக் கொண்டதன் பின்னர் அரசியலில் ஈடுபடுவதற்கு எவ்வித தடையும் கிடையாது. சில நாடுகளில் பீல்ட் மார்ஷல்கள் ஜனாதிபதிகளாக கடமையாற்றியுள்ளனர்.

நாட்டு மக்களுக்கு சேவையாற்ற எந்தப் பதவியும் தடையாக அமையாது என அனோமா பொன்சேகா கொழும்பு பத்திரிகையொன்றுக்கு செவ்வியளித்துள்ளார். (இ-5)

# மைத்திரி அரசிலிருந்து ஐ.தே.க.விலகினாலும் சு.க.பாதுகாக்குமாம்!

“மைத்திரிபால அரசிலிருந்து எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி விலகுமாயின் புதிய அரசை நிலைகுலைய விடாமல் அதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாதுகாத்து - ஆதரவு வழங்கி ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது. இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

“புதிய ஜனநாயக முன்னணி அரசு ஆட்சிபீடம் ஏறிய பின்னர் மகிந்த அரசால் மேற்கொள்ளப்பட்டுவந்த அபிவிருத்திப்பணிகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பலநூறு பேர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது புதிய அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய நல்லாட்சிக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே நம் அனைவரினதும் எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

ஆனால், தற்போது இவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மந்தகதியே காணப்படுகின்றது. அதிலும் மத்திய வங்கி ஆளுநர் குறித்த விவகாரத்தில் அரசு எவ்வித நடவடிக்கையையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இதனால், மத்திய வங்கி ஆளுநரான அர்ஜுன் மகேந்திரன் வெளிநாடு சென்று ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றார்.

சரியான முறையில் பார்த்தால் அவர் மீதான விசாரணைகள் முடியும்வரை அவருக்கு வெளிநாடு செல்வதற்குத் தடை விதித்திருக்க வேண்டும். எனினும், அரசு இந்த விடயத்தில் பெரும் தவறைச் செய்துள்ளது. ஊழல், மோசடிகள் தொடர்பில் வெளியில் இருப்பவர்களுக்கு கையைக்காட்டும் இந்த ஆளும் தரப்பினர் தங்களுக்குள் இருக்கும் மோசடிக்காரர்களை ஆதரிக்கின்றனர். இதுபோன்ற அரசின் செயற்பாடுகளால் அரசுக்கும் திருடர்களுக்கும் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகமும் எமக்கு ஏற்படுகின்றது.

இதேவேளை, ஏப்ரல் 23ஆம் திகதிக்குப் பின்னர் மைத்திரி அரசிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி வெளியேறுமாக இருந்தால் அவ்வரசைப் பொறுப்பேற்றுக்கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகவே உள்ளது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி அரசிலிருந்து வெளியேறுமாக இருந்தால், நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்துடன் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசை பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக உள்ளது. அரசினால் மேற்கொள்ள வேண்டிய ஏனைய பணிகளை நாம் சிறப்பாக முன்னெடுக்கவும் தயாராகவுள்ளோம்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## படிமரம் தந்த பாடம்

புத்தகங்கள் மட்டுமல்ல சில காட்சிகள்கூட நமக்குச்சில பாடங்களை, படிப்பினைகளைக் கொடுக்கும். அப்படிப்பட்ட படிப்பினைகளைப் பெற்றவர்கள் நல்லவிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்கிவிடுவார்கள். எனவே படிப்பினை என்பது நம்மைச் சுற்றி நடந்து கொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகளிலிருந்தே கிடைக்கும் ஒரு மனோபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிஞர்கள் சொல்கி றார்கள்.

இப்பொழுது பாருங்கள். ஓர் அரசன் தன்னுடைய பரிவாரங்களோடு தன்னுடைய நாட்டுப் பகுதியைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு இருக்கிறார். பல இடங்களையும் பார்த்துக்கொண்டு அப்படியே ஒரு காட்டுப்பகுதிக்கு அவர்கள் போகிறார்கள். மன்னருக்குக் கொஞ்சம் ஓய்வு எடுக்கவேண்டும் போல் இருந்தது. மிகவும் களைப்பாக இருந்தது: அப்பொழுது ஒரு பெரிய மாமரம் தெரிந்தது. அந்த மாமரத்துக்குக் கீழே மன்னர் இளைப்பாறுவதற்கு ஏற்பாடு செய்தார்கள். பரிவாரங்கள் எல்லாம் பக்கத்திலே இருந்தன.

அப்பொழுது திடீர் என்று அவர்கள் எல்லாம் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்துவிட்டது. எங்கு இருந்தோ வந்த ஒரு கல் மன்னருடைய தலையைத் தாக்கியது. அதனால் அவர் தலையில் இலேசான காயமும் ஏற்பட்டு விட்டது.

மன்னர்மீது கல் வீசியது யார்? என்று எல்லோருக்கும் ஒரே வியப்பு. உடனே அந்த ஆளைத் தேடிப்பிடியுங்கள் என்று மன்னர் உத்தரவிட்டார். பரிவாரங்கள் ஆங்காங்கே ஓடினார்கள். நான்கு திசைகளிலும் தேடினார்கள். பின்பு பார்த்தால் ஒரு புதருக்குள்ளே ஒருத்தர் உட்கார்ந்திருந்தார். அவரைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள்.

நீதான் கல் எறிந்தாயா? அவரிடம் கேட்டார்கள். ஆமாம் என்றார் அவர். அவரை ராஜா முன்னால் கொண்டுவந்து நிறுத்திய உடனே எல்லோருக்கும் கோபம். ராஜா மேல் கல் எறியும் அளவுக்கு அவ்வளவு தைரியமா உனக்கு? என்ன நோக்கத்தில் கல் எறிந்தாய்? என்று அமைச்சர் விசாரித்தார். பின்பு ராஜாவும் அதைப்பற்றிக் கேட்பதில் ஆர்வமாக இருந்தார். இப்படித் தைரியமாக கல் எறிகின்ற எண்ணம் இவனுக்கு எப்படி வந்ததென்று. அப்பொழுதுதான் அந்த ஆள் விபரத்தைச் சொல்லியிருக்கிறார்.

ஐயா, என்னை மன்னித்துவிடுங்கள். உங்கள் மேல் கல் வீசவேண்டும் என்று எனக்கு எண்ணமே கிடையாது. அப்படி ராஜா மேல் அவமரியாதையாக நான் கல் வீசுவேனா? ஆனால் உண்மை என்ன தெரியுமா? எனக்குப் பசி. இந்தப் பக்கமாக நடந்து வந்து கொண்டிருந்தேன். பசியைப் பொறுக்கமுடியவில்லை. இந்தப் பெரிய மாமரத்தைப் பார்த்தேன். அடர்ந்த கிளைகளோடு இது படர்ந்திருக்கிறதல்லவா? அதனால் ஓரத்தில் இருக்கின்ற ஒரு கிளையில் ஒரு கல்லைத்தூக்கி வீசினால் மாம்பழம் விழும். அதை எடுத்துச் சாப்பிட்டு பசி ஆறலாம் என்று நினைத்தேன். அதனால் கல்லை எடுத்து வீசினேன். நான் எதிர்பார்த்த மாதிரியே 2 மாம்பழங்களும் விழுந்தன. ஆனால் அந்தக் கல் அதையும் தாண்டி வந்து உங்கள் நெற்றியைப் பதம் பார்க்கும் என்று நான் நினைக்கவேயில்லை. அதனால் என்னுடைய நோக்கம் பழத்தை வீழ்த்துவதுதானே தவிர உங்களை அடிக்கிறது இல்லை. தெரியாமல் நடந்துபோய்விட்டது. என்னை மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உடனேஅமைச்சருக்குக் கோபத்தை அடக்க முடியவில்லை. அதெல்லாம் கிடையாது. தண்டனையை உங்களுக்குக் கொடுக்கத்தான் போகிறோம் என்று சொன்னபோது ராஜா அவரைத் தடுத்தார்.

கொஞ்சம் நிறுத்துங்கள். அவர் சொல்வதில் ஒரு முக்கியமான கருத்து இருக்கிறது. அவர் என்ன செய்தார். கல்லைத் தூக்கி எறிந்திருக்கிறார். எறிந்த உடனே மாமரம் என்ன செய்திருக்கிறது. தன்மேல் கல்லைத் தூக்கி எறிகிறான் என்று அது கோபப்படவில்லை. அதற்குப் பதிலாக அது இரண்டு பழங்கள் அவருக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறது. ஒரு மாமரத்துக்குக் கூட இந்த மாதிரி அறிவு இருக்கும்போது மனிதனாக இருக்கிற நாம் வந்து கோபப்படலாமா? அதனால் அவருக்கு நாம் ஏதாவது கொடுத்தனுப்பலாம் என்று பரிசு கொடுக்க ஏற்பாடு செய்தார்.

எங்களைப்போல் ஆறு அறிவு இல்லாத மரமே தன்னைப் பார்த்துக் கல் எறிந்தவனுக்கு பழத்தைப் பரிசாகக் கொடுக்கிறதென்றால் நாம் ஆறு அறிவை வைத்துக்கொண்டு அதில் இருந்து பாடம் படிக்கவேண்டாமா? என்று அந்த ஆளுக்கு வேண்டிய உதவிகளையும் அங்கிருக்கிறவர்கள் செய்து அனுப்பினார்கள்.

இதுதான் சுற்றுப்புறத்திடமிருந்து நாம் கற்றுக்கொள்கின்ற பாடம். மனிதநேயம். இந்த மனிதநேயத்தை மனித உறவுகளுக்கு உள்ளே நாம் பார்க்கமுடியவில்லை.

ஒரு அப்பா மகனைப் பார்த்து நெஞ்சு வலிக்குதப்பா. டாக்டர் வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போ என்றார். பையன் சொன்னான். அதெல்லாம் இருக்கட்டும் அப்பா. அதற்கு முந்தி வக்கீல் வீட்டுக்குப் போய்விடுவோம். உயில் எழுதுகின்ற வேலையை முடித்துவிட்டோம் என்றால் பின்பு டாக்டரைப் பார்த்துக்கொள் ளலாம் என்று.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்மோகன் சிங்கை மிரட்டும் இருவர்?

சோனியா காந்தி வீட்டுக்கும் முன்னாள் பிரதமர் மன்மோகன சிங் வீட்டுக்கும் வெகு தூரம் கிடையாது. இருவர் வீடுகளுக்கும் இடையில் இருப்பது ஒரு ரவுண்டானா மட்டும்தான். அந்தத் தூரத்துக்கு ஒரு மினி ஊர்வலம் வந்து மன்மோகனுக்குத் தன் ஆதரவைத் தெரிவித்துள்ளார் சோனியா.

எதற்கு இந்த ஆதரவு? நிலக்கரி ஒதுக்கீட்டில் ஊழல் நடைபெற்றதாகச் சொல்லப்பட்ட விவகாரத்தில் மன்மோகன் சிங் ஆறாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார். வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி சி.பி.ஐ சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராக அவருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில்தான், காங்கிரஸ் கட்சி தன் முழுமையான ஆதரவை மன்மோகன் சிங்குக்குக் கொடுக்கும் என்பதைக் காண்பிக்கவே இந்த மினி ஊர்வலம்.

**நிலக்கரி வழக்கின் ப்ளாஷ்பேக் என்ன?**

தொலைத்தொடர்புத் துறை அலைக்கற்றை ஊழலை வெளியே கொண்டுவந்த சி.ஏ.ஜி (மத்திய தணிக்கைத் துறையினர்)தான், இந்த நிலக்கரி வயல்கள் ஒதுக்கீட்டு ஊழலையும் வெளியே கொண்டு வந்தது. நிலக்கரி சுரங்க ஒதுக்கீடுகளில் சுமார் ஒரு லட்சத்து 85 ஆயிரம் கோடி அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று அறிக்கை கொடுக்கப்பட்டது. அது சுப்ரீம் கோர்ட்டுக்கும் போனது. அந்த விவகாரத்தில் தான் தற்போது மன்மோகன் சிங் தலைஉருளுகிறது. வழக்கறிஞர்களாகவும் இருக்கும் காங்கிரஸ் முன்னாள் அமைச்சர்கள் பலரும் கறுப்பு கவுன் போட்டு மன்மோகன் சிங்குக்காக வாதாடத் தயாராகி வருகிறார்கள். மன்மோகன் சிங் பிரதமராக இருந்த சமயத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் பலரும் பதற ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 64 நிலக்கரி வயல்களுக்குப் போடப்பட்ட ஆயிரத்து 422 விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இவற்றின் சுரங்க ஏல விவகாரங்களையும் சி.பி.ஐ. விசாரித்தது. ஆளும் கட்சியின் தலையீடு காரணமாகவோ என்னவோ, சி.பி.ஐ இந்த விவகாரத்தில் விசாரணையில் மந்தமாகவே இருந்தது. பொதுநல வழக்காக இந்த விவகாரம் சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்தது. அதன் பிறகுதான் சி.பி.ஐ மீது கேள்விகள் தொடுக்கப்பட்டன. இதில் முக்கியமாகக் குற்றம் சாட்டப்பட்டது ஒடிசா மாநில தலபிரா நிலக்கரி சுரங்க விவகாரம். ஆதித்யா பிர்லா குரூப் நிறுவனத்தின் ஒடிசா அலுமினிய கம்பெனியான ஹிண்டால்கோ நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட நிலக்கரி சுரங்கம் இது. அப்போது பிர்லா நிறுவனத்தின் தலைவர் குமார மங்கலம் பிர்லா, இந்த நிலக்கரிச் சுரங்கம் ஒதுக்கீடு நடந்த சமயத்தில் இந்தத் துறையின் செயலாளராக இருந்த பி.சி. பரேக் போன்றவர்களின் பெயர்களோடு, 'அதிகாரம பெற்றிருந்தவர்' என்று மற்றொரு பெயரையும் சி.பி.ஐ குறிப்பிட்டது. யார் அந்த அதிகாரம் பெற்றவர் என்று கேள்வி எழுந்தது. அதிலும் குறிப்பாக, முன்னாள் நிலக்கரிச் துறைச் செயலாளர் பரேக் போன்றவர்கள் சொன்ன கருத்துகளும் பின்னர் அவர் எழுதிய புத்தகமும் இந்த விவகாரத்தில் மேலும் சந்தேகங்களைக் கிளப்பியது.

முக்கியப் பிரமுகர்கள் தப்பிக்க சி.பி.ஐ உதவுகிறது என்ற குற்றச்சாட்டும் வந்தது. சுப்ரீம் கோர்ட் இதை சீரியஸாக எடுத்து[illegible] இந்த நிலக்கரி சுரா[illegible]

விவகாரத்துக்கு தனி சி.பி.ஐ நீதிமன்றம் அமைக்க டெல்லி உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது. இதன்படி கூடுதல் செஷன்ஸ் நீதிபதி அந்தஸ்தில் இந்த சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக பரத் பராசர் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர்தான் இப்போது மன்மோகன் சிங்குக்கும் இந்த தொழிலதிபர்களுக்கும் சம்மன் அனுப்பியுள்ளார்.

விவசாயிகளுக்கு எதிரான நிலம் கையகப்படுத்துதல் மசோதா விவகாரத்தை திசை திருப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்றும் காங்கிரஸ் காரணம் சொன்னது.

2005 ஆம் ஆண்டு பிரதமராக வும் நிலக்கரித் துறை அமைச்சராகவும் இருந்தார் மன்மோகன் சிங். இந்த சமயத்தில்தான் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடுகளுக்கு சிபாரிசுகளும் வந்து சேர்ந்தன. பிரதமரின் கீழ் இருந்த இந்தத் துறையில் முறையாகத்தான் நிலக்கரி ஒதுக்கீடுகள் நடந்தன. தற்போது நடைபெற்ற ஏல முறை அப்போது இல்லை என்றாலும் உயர்மட்ட கமிட்டிகள் அமைக்கப்பட்டு முறைப்படி சுரங்கங்கள் ஒதுக்கப்பட்டன. ஆனால், இந்த உயர் மட்ட ஸ்டீரிங் கமிட்டிகளையும் தாண்டி காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து வரும் 'சிட்டி'களுக்கு மதிப்பளித்து பிரதமர் அலுவலகம் முடிவு எடுக்க... இதனால்தான் இப்போது டென்ஷன் என்று சொல்லப்படுகிறது. "பிரதமர் அப்பழுக்கற்றவர்தான். ஆனால், அவர்தான் இந்த விவகாரங்களுக்கும் பொறுப்பு. அவரை இயக்கியவர்கள் யார் என்று சொல்லட்டும்" என்று கேட்கிறார்கள் [illegible] சிலர்.

முன்னாள் பிரதமரை நீதிமன்றம் படியேறக் காரணமாக இருப்பவர், இருவர். ஒருவர் சி.பி.ஐயின் சிறப்பு வழக்கறிஞர் ஆர்.எஸ்.சீமா மற்றொருவர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி பரத் பராசர்.

இந்த ஹிண்டால்கோ நிறுவனம் சம்பந்தப்பட்ட தலபிரா நிலக்கரி சுரங்கங்கள் 1 மற்றும் 2 விவகாரத்தில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் திகதியே சிறப்பு நீதிமன்றத்தில், 'இந்த நிலக்கரி ஒதுக்கீட்டில் எந்தக் குற்ற நடவடிக்கைகளும் இல்லை' என்று சொல்லி சி.பி.ஐ வழக்கை மூடக் கோரியது. "நாங்கள் ஹிண்டால்கோ நிறுவன அதிகாரிகளையும் பிரதமர் அலுவலக அதிகாரிகளையும் மட்டுமல்ல, இந்த நிறுவன சுரங்கம இருக்கும் ஒடிசா மாநில அதிகாரிகளிடமும் விசாரணை நடத்தி விட்டோம். ஆனால், குற்றச்சாட்டுக்கும் உள்நோக்கத்துக்கும் போதிய ஆதாரமில்லை. ஒடிசா அரசு, மின்சாரத்தைவிட இந்த அலுமினிய ஆலையினால் வேலை வாய்ப்புகளையும் பொருளாதாரத்தையும் உருவாக்கும் என்று கருதி நிலக்கரி ஒதுக்கீடு செய்ய சிபாரிசு செய்துள்ளது. அதிலும் சி.பி.ஐ அமைச்சரவையின் முடிவுகளை கேள்வி எழுப்ப முடியாது" என்று சொல்லி வழக்கைத் தொடர முடியாது என்றது சி.பி.ஐ.

பல்வேறு பிரச்சினைகளில் சிக்கிய முன்னாள் சி.பி.ஐ இயக்குநர் ரஞ்சித் சின்கா, இயக்குநராக இருந்த சமயத்தில் நடந்தது இந்த விவகாரம். அடுத்த சில மாதங்களில் சுப்ரீம் கோர்ட் நியமனம் செய்த சி.பி.ஐ வழக்கறிஞர் சீமா, 'இந்த ஊழல் வழக்கைத் தொடர இருக்கிற ஆதாரங்கள் போதுமானவை' என்று சொன்னார். இதனபடி நீதிபதி பரத் பராசர், வழக்கை க்ளோஸ் செய்ய சி.பி.ஐ க்கு அனுமதி மறுத்ததுடன், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கையும் விசாரிக்க சி.பி.ஐக்கு உத்தரவிட்டார். இது முதல் திருப்புமுனை.

இதன்படி மன்மோகன் சிங்கை கடந்த ஜனவரி மாதம் விசாரணை நடத்தியது சி.பி.ஐ. அவர, "நான் எடுத்த முடிபு, நாட்டின் நலன் கருதி எடுக்கப்பட்டதுதான்" என்று சொன்னார். இதை வைதது சி.பி.ஐ மீண்டும், "இந்த வழக்கில் கிரிமினல் குற்றச் சாட்டுகளுக்கு வாய்ப்பில்லை" என்று வழக்கை முடிவுக்கு கொண்டு வர, பிப்ரவரி 19ஆம் திகதி மனுத் தாக்கல் செய்தது. இந்த முறையும் மனுவை ஏற்றுக்கொள்ள மறுத்த சி.பி.ஐயின் சிறப்பு நீதிமன்ற நீதிபதி பராசர், மன்மோகன் சிங் மற்றும் ஆதித்யா பிர்லா க்ரூப்பை சேர்ந்தவர்களுக்கும் சம்மன் அனுப்ப உத்தரவிட்டார். 1992ஆம் ஆண்டு டெல்லி ஜுடிஷியல் சர்வீஸில் தேர்ச்சி பெற்று வந்த ஹரியானாக்காரர் பரத் பராசர் நேர்மையான நீதிபதி எனப் பெயர் எடுத்தவர். பூலான் தேவி கொலை வழக்கு, மது கோடா வழக்கு உடபட பல்வேறு அரசியல் வழக்குகளில் முத்திரை பதித்தவர் பராசர். இந்தப் பின்னணிகள் எல்லாம் தெரிந்துதான் சுப்ரீம் கோர்ட்டும் டெல்லி உயர் நீதிமன்றமும் இந்த வழக்கையும் இவருக்குக் கீழ் வர வைத்தது. முன்னாள் முதல்வர், முன்னாள் பிரதமர் எல்லாம் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் கால கட்டம். நன்றாகத்தான் போகிறது நாடு.



**யூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தாக்குதலில் 80 பயங்கரவாதிகள் பலி

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில், அந்நாட்டு இராணுவத்தினர் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில், பயங்கரவாதிகள் 80 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் அசீம் பஜ்வா தெரிவித்துள்ளார்.**

ஆப்கானிஸ்தான் எல்லையோரத்தில் உள்ள பழங்குடியினர் பகுதியான கைபர் மாவட்டத்தில், பயங்கரவாதிகளின் நடமாட்டத்தை அடியோடு அழிக்கும் நோக்கில், பாகிஸ்தான் இராணுவம் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறது.

இந்தப் பகுதியில், இராணுவம் நேற்று முன்தினம் நடத்திய வான் வழி, தரைவழித் தாக்குதல்களில் 80 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். 100இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். சண்டையில், பாதுகாப்பு படை வீரர்கள் 7 பேரும் உயிரிழந்தனர். இந்தப் பகுதியில், பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றிலும் ஒழிக்கும் வரை, இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று அசீம் பஜ்வா தெரிவித்தார்.

பெஷாவரில், பாகிஸ்தான் இராணுவத்தால் நடத்தப்பட்டு வரும் பாடசாலையில், கடந்த ஆண்டு டிசெம்பரில், தலிபான் பயங்கரவாதிகள் நடத்தியதாக்குதலில், மாணவர்கள் உள்ளிட்ட 150 பேர் கொல்லப்பட்டதையடுத்து, தலிபான்களுக்கு எதிரான கைபர்- 1 ஆபரேஷன் என்னும் தாக்குதல் நடவடிக்கையை பாகிஸ் தான் இராணுவம் மேற்கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# தண்ணீர்த்தட்டுப்பாடு 40சதவீதம் ஏற்படும்!

## ஐ.நா. எச்சரிக்கை

குடிதண்ணீரை சரியான முறையில் பயன்படுத்தாமல் அதிக அளவில் உபயோகப்படுத்தி வீணடிப்பதன் மூலம் எதிர்வரும் 2030இல் உலகம் 40 சதவீத தண்ணீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது. மழை நீர் சேமிப்பு இல்லாதது, நிலத்தடி நீர் இருப்பு குறைவது மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பு உள்ளிட்ட முக்கிய காரணிகளால் இந்த தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படவுள்ளதாக ஐ.நா கூறியுள்ளது.

இந்த தண்ணீர் தட்டுப்பாடு விவசாயம் மற்றும் தொழிற்துறை உள்ளிட்டவற்றையும் பாதிக்கும் என எச்சரித் ள்ளது. இதனையடுத்து, தண்ணீரை மேலும் பாதுகாப்பது மற்றும் கழிவு நீரை சுழற்சி செய்து பயன்படுத்துவது போன்ற காரணங்களை வலியுறுத்தி தண்ணீர் கொள்கைகளை மறு பரிசீலினை செய்யுமாறு அரசு மற்றும் சமூகங்களுக்கு ஐ.நா. அழைப்பு விடுத்துள்ளது. (இ-5)




# அமெரிக்க இராணுவத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். கடும் மிரட்டல்

அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஒன்லைனில் எச்சரிக்கை விடுத்துள்னர். இது தொடர்பாக பென்டகன் விசாரணை நடத்தி வருகிறது.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், ஈராக், சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி பிணைக்கைதிகளை பிடித்து தலையைத் துண்டித்து படுகொலை செய்து, அதை காணொலியாக எடுத்து, ஒன்லைனில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

இப்படி உலகையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் ஐ.எஸ்ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்தில் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, ஸ்பெயின், அவுஸ்திரேலியா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் சேர்ந்து போரிட்டு வருகின்றனர். இதை எதிர்த்து, அமெரிக்காவின் தலைமையில் உலக நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்க இராணுவத்திற்கு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர்.

100 அமெரிக்க இராணுவ வீரர்களின் பெயர் மற்றும் முகவரியுடன் இணையதளத்தில் அவர்கள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர். மேலும் அதில், அவர்களை கொலை செய்ய உள்ளதாக ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்து உள்ளனர். அமெரிக்காவின் பாதுகாப்பு சர்வர்கள் மற்றும் தரவுத்தளங்களை முடக்கம் செய்துவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்து உள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் இந்த எச்சரிக்கை தொடர்பாக பென்டகன் விசாரணையை தொடங்கி உள்ளது. அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி ஒருவர் இது பற்றி கூறுகையில், இந்த தகவல்களில் உண்மை உள்ளதா? என்பதை உறுதிப்படுத்த முடியாது. ஆனால், இது தொடர்பாக நாங்கள் விசாரித்து வருகிறோம் என்று அவர் தெரிவித்தார். (இ-5)



ஆகாயத்தில் சாகச விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள் 57பேர் ஒன்றாக கைகோர்த்த படி விமானத்திலிருந்து தலைகீழாக குதித்து நேற்று முன்தினம் சாதனை நிகழ்த்தியுள்ளனர். இச்சாதனையை இவ்விளையாட்டில் ஈடுபட்டு 2009ஆம் ஆண்டு உயிரிழந்த தங்களுடைய சகவீரருக்கு அர்ப்பணிப்பதாக இச்சாதனையை நிகழ்த்திய வீரர்கள் தெரிவித்தனர்.

# தீவிரவாதிகளின் தாக்குதலால் சிரியாவில் 103பேர் உயிரிழப்பு

(பெய்ரூட்)

ஈராக் மற்றும் சிரியாவில் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து இந்த நாடுகளில் தாக்குதல் நடத்தி வருகிறார்கள். தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகளின் படைகள் ஈடுபட்டு உள்ளன.

இந்த நிலையில் சிரியாவில் உள்ள மத்திய ஹாம்ஸ் மற்றும் ஹமா மாகாணங்களில் கடந்த வெள்ளிக்கிழமை பொலிஸ் சோதனைச் சாவடிகளை குறி வைத்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 70 இராணுவ வீரர்கள் பலியாகினர்.

வடகிழக்கு சிரியாவில் குர்திஷ் இன மக்கள் அதிகம் வாழும் ஹசாகா நகரில் பாரம்பரிய புத்தாண்டை கொண்டாடினர். அப்போது தற்கொலைப்படை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 33 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலுக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தான் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)



# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கும் ஏமன் தாக்குதலுக்கும் தொடர்பில்லை

## அமெரிக்கா தெரிவிப்பு

ஏமன் மசூதிகளில் நடத்தப்பட்ட தற்கொலை படைத் தாக்குதல்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈடுப்பட்டதாக ஆதாரங்கள் இல்லாததால் தாக்குதலுக்கு அந்த இயக்கத்தை தொடர்புபடுத்த முடியாது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஏமன் தலைநகர் சனா மற்றும் சாடா மாகாணங்களில் கடந்த வெள்ளிக்கிழமை தொழுகையை குறி வைத்து மசூதிகளில் தற்கொலை படைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தொடர்ந்து 3 குண்டு வெடிப்புகள் நடந்த இந்த மோசமான தாக்குதலில் தற்போதைய நிலையில் 137 பேர் பலியாகினர். 350இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப் பேற்றுள்ளனர். இதுபோன்ற தாக்குதல் தொடரும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய செய்தித் தொடர்பாளர் ஜோஷ் ஏர்னெஸ்ட், தற்போதைய நிலையில் ஏமன் தாக்குதலுக்கு அந்நாட்டு தீவிரவாத இயக்கங்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். உதவியதாக எந்த யூகமும் செய்ய முடியாது. அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம் ஏற்கனவே டுனிசியா தாக்குதலுக்கு பொறுப்பேற்றது. அந்த தாக்குதலில் அவர்கள் ஈடுபடாத நிலையில், தங்களது கோட்பாடுகளை பரப்ப பிரசார நோக்கங்களுக்காக இது போல பொறுப்பேற்றுக் கொள்கின்றனர். தாக்குதலுக்கு அவர்கள் பொய்யாக பொறுப்பேற்கலாம் என்றார்.

அரபு நாடான ஏமனில் அதிகாரப்போட்டி காரணமாக, நீண்ட காலமாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது. அங்கு தலைநகர் சனாவை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அண்மையில் கைப்பற்றி தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளனர்.

இதனால் அங்கு அரசியல் அசாதாரண சூழல் நிலவுகிறது. தற்போது தாக்குதலுக்குள்ளான மசூதிகள் அனைத்தும் ஏமன் ஹவுத்தி ஷியாப் பிரிவு மக்கள் வழிபடும் இடங்களாகும். உள் நாட்டு பிரச்சினைகளில் அரசை கவிழ்த்து தலைநகர் சனா உள்ளிட்ட 21 முக்கிய மாகாணங்களை ஹவுத்தி படையினர் தங்களது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகமில்லாத இலக்கங்களிலிருந்து வருகின்ற அழைப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டாமாம்

## பொலிஸார் அறிவுறுத்து

(கொழும்பு)

அறிமுகமில்லாத இலக்கங்களில் வரும் தவறுதலான அழைப்புகளுக்கு திருப்பி அழைக்க வேண்டாம் என சிறுவர் மற்றும் மகளிர் பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பிரதிப் பணிப்பாளரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான லங்கா ரஞ்சினி இதனை தெரிவித்துள்ளார்.

தெரியாத இலக்கங்களிலிருந்து வரும் தவறுதலான அழைப்புகளுக்கு இளைஞர் யுவதிகள் திருப்பி அழைத்து பல பிரச்சினைகளில் சிக்கியுள்ளமை குறித்து அநேக முறைப்பாடுகள் நாளாந்தம் கிடைக்க பெறுகின்றன.

அதிகளவிலான யுவதிகள் இவ்வாறான தவறுதலான அழைப்புகளுக்கு மீண்டும் அழைத்து தெரியாதவர்களுடன் பேசி நண்பர்களாகின்றனர். அதன் பின்னர் நட்பு காதலாக உருவெடுத்து நேரில் சந்தித்து பேசிக்கொள்ளும் அளவுக்கு சென்று விடுகின்றது.

இது அத்தோடு நிறுத்தப்படாமல் விடுதிகளை தெரிவு செய்து பாலியல் ரீதியில் தொடர்புகளை ஏற்படுத்தி கொண்டு பெண்கள், ஆண்களினால் கைவிட்டு செல்லப்படும் நிலை ஏற்பட்டுளளது.

எனவே தற்போதைய யுவதிகள் தங்களுக்கு தெரியாத இலக்கங்களுக்கு பதிலளித்து பிரச்சினைகளுக்கு ஆளாகிவிடாதீர்கள் என அவர் மேலும் கேட்டு கொண்டுள்ளார். (இ)




மல்லாகம் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 50 மாணவர்களுக்கு யாழ். திருச்சபை திருப்பணி மன்றத்தினரின் நிதியுதவியில் இலவச பாதணிகள் அண்மையில் வழங்கப்பட்ட போது....

# மரணதண்டனை நிறைவேற்றுவதால் பழி உணர்வுகள்தான் வளர்க்கப்படும்

## போப் பிரான்சிஸ் கருத்து

**குற்றமிழைத்தவரைக் கொல்வதால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது. மாறாக பழி உணர்வைத்தான் வளர்க்கம் என சுட்டிக்காட்டியுள்ள போப்பாண்டவர் பிரான்சிஸ், நீதியின் பெயரைச் சொல்லி மரணதண்டனையை நிறைவேற்றுவதும் நாடுகள் செய்யும் படுகொலையே எனவும் தெரிவித்துள்ளார்.**



மரண தண்டனைக்கு எதிரான சர்வதேசக் குழு அமைப்புக்கு அவர் அளித்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

மரணதண்டனையை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. ஒரு மனிதனைக் கொல்ல மற்றொரு மனிதனுக்கு ஒருபோதும் உரிமை கிடையாது. குற்றம் எவ்வளவு கொடியது என்றாலும், அதற்காக மரண தண்டனை விதிப்பது தற்காலத்தில் ஏற்புடையது அல்ல.

குற்றமிழைத்தவரைக் கொல்வதால், பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்காது. மாறாக, பழி உணர்வைத்தான் வளர்க்கும், மரண தண்டனை என்பது தோல்வியின் பிரதிபலிப்பே ஆகும்.

அது, நீதியின் பெயரைச் சொல்லி மரண தண்டனை நிறைவேற்றுவதும் நாடுகள் செய்யும் படுகொலையே ஆகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## முடிந்தால் நாடாளுமன்றைக் கலைத்துக் காட்டவும் ஐ.தே.கவுக்கு சவால் விடும் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

முடிந்தால் நாடாளுமன்றைக் கலைத்துக் காட்டவும் என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால் விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதியன்று முடிந்தால் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றைக் கலைத்துக் காட்டட்டும்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் பெரும்பான்மை பலம் கிடையாது. அந்த இரண்டு கட்சிகளும் வெறும் வாய்ச்சவடால் விட்டு வருகின்றன. குறித்த கட்சிகளின் தாளத்திற்கு ஏற்ப ஆடத் தயாரில்லை.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற கால எல்லைகளை நிர்ணயிக்க தேவையில்லை.

நாட்டுக்குத் தேவையான அரசியல் அமைப்பு திருத்தங்களைச் செய்ய ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும்.

19ஆம் திருத்தச் சட்டமும் தேர்தல் திருத்தங்களும் ஒரே நேரத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்த ஜே.வி.பியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்காவிட்டால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இந்த திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து நிறைவேற்றும்.

இதற்காக ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக நிமால் சிறிபால டி சில்வா கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தமிழக மீனவர்கள் கைதுக்கு தமிழிசை கடும் கண்டனம்!



(சென்னை)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது என பாஜக தமிழக மாநில தலைவர் தமிழிசை சவுந்தர்ராஜன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சென்னைவிமானநிலையத்தில் நேற்று செய்தி யாளர்களை சந்தித்த பாஜக மாநில தலைவர் தமிழிசை சவுநதரராஜன், பிரதமரும், வெளியுறவுத் துறை அமைச்சரும் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண முயற்சித்துவரும் வேளையில் இலங்கை அரசின் இந்த கைது நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. ஒருசில இலங்கை அதிகாரிகளின் நடவடிக்கையால் இது போன்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது தற்காலிக பிரச்சினை மட்டுமே. விரைவில் மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என்று தெரிவித்தார். (இ-5)

## சிறுநீரக நோயை ஏற்படுத்தக்கூடிய பூச்சி கொல்லிகளுக்குத் தடை

சிறுநீரக நோயை ஏற்படுத்தக் கூடிய பூச்சிகொல்லிகள் உட்பட அனைத்து விவசாய இரசாயனப் பொருட்களையும் தற்காலிகமாக தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சமூக சேவைகள் அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எந்த இரசாயனப் பொருட்களை தடைசெய்வது என்பதை இரசாயனப் பொருட்கள் இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தும் ஆணையாளர் தீர்மானிப்பார்.

மேலும் சிறுநீரக நோயை தவிர்ப்பதற்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### கனகரெத்தினம் கோபிநாத்



பருத்தித்துறை தும்பளையைப் பிறப்பிடமாகவும் நோர்வே Bergen ஐ வதிவிடமாகவும் கொண்ட கனகரெத்தினம் கோபிநாத் கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பி.ப 12.30 மணியளவில் Mollendalen Ved Danmar ks plass,5171, Bergen, Norway என்னும்முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### அந்தோனிப்பிள்ளைராஜன் பத்மா



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் பெல்ஜியம் Seraing ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளைராஜன் பத்மா கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாருக்கு நாளை மறுதினம் புதன்கிழமை அன்று Rue Des Coqelicots 14020, Bressoux, Belgium என்னும் முகவரியில் பி.ப.ஒரு மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

### முருகப்பர் சுப்பையா


(இளைப்பாறிய அதிபர்)



நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முருகப்பர் சுப்பையா கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி கந்தையா சுந்தரம்மா



களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரம்மா நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தில்லை மயானத்தில் தகனம் செய் யப்படும்.

### திருமதி இராசரத்தினம் மகாலட்சுமி



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் மகாலட்சுமி நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

### வேலாயுதபிள்ளை விக்கினேஸ்வரன்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Bern ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுத பிள்ளை விக்கினேஸ்வரன் கடந்த 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை மு.ப ஒரு மணியளவில் Bremgarten Friedhof, Murtenstrasse 51,3008 Bern Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேகதாது அணைக்கு எதிர்ப்பு

# தமிழகம் முழுவதும் 28ல் முழு அடைப்பு!

(சென்னை)

**காவிரியில் கர்நாடகம் அணை கட்டுவதை தடுக்க வலியுறுத்தி தமிழகம் முழுவதும் எதிர்வரும் 28ஆம் திகதி முழு அடைப்பு போராட்டம் நடத்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.**



கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே மேகதாது உட்பட 3 இடங்களில் அணைகள் கட்ட முடிவு செய்துள்ளது. இதை தடுக்கவும், காவிரி மேலாண்மை வாரியம் அமைக்கவும், காவிரி நதிநீர் பங்கீட்டு குழு அமைக்கவும் வலியுறுத்தி தமிழ் நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் அனைத்துக் கட்சி கூட்டம் சென்னை, ராயப்பேட்டையில் நேற்று நடைபெற்றது.

இதில், தி.மு.க. சார்பில் டி.கே.எஸ்.இளங்கோவன், காங்கிரஸ் சார்பில் பலராமன், பா.ம.க. சார்பில் வேலு, ஜெயராமன், த.மா.கா. சார்பில் ஞானதேசிகன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், பா.ஜ.க. தமிழக மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், ம.தி.மு.க.வைச் சேர்ந்த மல்லை சத்யா, சமத்துவ மக்கள் கட்சி சார்பில் எர்ணாவூர் நாராயணன் எம்.எல்.ஏ., தே.மு.தி.க. எம்.எல்.ஏ. பாலஅருள்செல்வன், மனித நேய மக்கள் கட்சி ஜவாஹிருல்லா, மூவேந்தர் முன்னணி கழகம சார்பில் டாக்டர் சேதுராமன், தி.க. சார்பில் கலிபூங்குன்றன் உட்பட பல்உவேறு அரசியல் கட்சியினரும், தமிழ் அமைப்பனரும்கலந்து கொண்டனர.

இந்த கூட்டத்தில், மீதேன் திட்டத்தை எதிர்த்து அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு நின்றதால் வெற்றி பெற்றோம். அதேபோல் காவிரியில், கர்நாடகம் தடுப்பணைகள் கட்டுவதை தடுக்கவும், அனைத்து கட்சிகளும் ஒன்றுபட்டு நின்றால் நிச்சயம் வெற்றி பெற முடியும் என அனைத்து கட்சியினரும் கருத்து தெரிவித்தனர். மேலும், மேகதாது அணை விவகாரம் தொடர்பாக கர்நாடக அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகம் முழுவதும் எதிர்வரும் 28 ஆம் திகதி முழு அடைப்பு போராட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், "மத்திய அரசு கர்நாடக அரசின் அணை கட்டுமானப்பணியினை தடுத்து நிறுத்தி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின் அடிப்படையில் காவிரி மேலாண்மை வாரியம், காவிரி நீர் பங்கீட்டு ஒழுங்காற்றுக்குழு ஆகிய இரண்டு தன்னாட்சி அதிகாரம் கொண்ட அமைப்புகளை உடன் உருவாக்கி தமிழகத்தின் விவசாயத்தையும் குடிநீர் ஆதாரத்தையும் உறுதிபடுத்தி காவிரி நீரை பயன்படுத்தும் சுமார் 5 கோடி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க மத்திய அரசின் சார்பில் பிரதமர் அவசரகால நடவடிக்கை எடுத்திட இக்கூட்டம் வலியுறுத்துகிறது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

பாரதச் செய்தி

## ஐ.எஸ்.ஐ.எஸ்ஸில் மகிழ்ச்சியாகவுள்ளேன்

### இந்திய இளைஞன் தெரிவிப்பு

மும்பையில் இருந்து ஈராக் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்த இளைஞன் ஒருவன் தான் மகிழ்ச்சியாக இருப்பதாகவும், இந்தியாவுக்கு திரும்பி வரப்போவது இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மே மாதம் மும்பையின் கல்யாண் பகுதியை சேர்ந்த 4 இளைஞர்கள், ஐ.ஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார்கள். சுற்றுலா செல்வதாக வீட்டில் கூறிவிட்டு ஈராக் சென்று அந்த இயக்கத்தில் சேர்ந்துவிட்டனர். பின்னர் அவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் அதிகம் தொடர்பு வைத்துக்கொள்ளவில்லை. இந்நிலையில் ஒரு மாதத்துக்கு முன், 4 பேரில் ஒருவரான ஷேக் தன் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் தொலைபேசி மற்றும் ஸ்கைப் மூலம் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

இவர் தற்போது சிரியாவின் ரக்கா பகுதியில் உள்ளார். தேசிய புலனாய்வு அமைப்பினர் ஷேக்கின் தொலைபேசி எண்ணை கண்டுபிடித்து அவருடன் பேசியுள்ளார்கள். அப்போது தான் நான் இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறேன். இந்தியாவுக்கு திரும்ப வரப்போவது இல்லை என்று தெரிவித்துள்ளார். மேலும் எங்கள் இனத்தை சேர்ந்தவர்களை இந்தியா மரியாதையாக நடத்தவில்லை என்றும் கூறியுள்ளார. அவருடன்சென்ற சஹிம் டாங்கி என்பவர் மோதலில் இறந்து விட்டதாக கூறப்பட்டு வந்த தகவலையும் ஷேக் உறுதிப்படுத்தியுள்ளார்.

4 பேரில் ஒருவரான ஆரீப் மஜீத் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பிடிக்காமல் கடந்த நவம்பரில் நாடு திரும்பிவிட்டார். குறிப்பாக பெண்களை கட்டாயப்படுத்தி ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு திருமணம் செய்து வைப்பது, கட்டாயமாக பலர்த்காரம் செய்வது என மிக மோசமாக நடத்துவது பிடிக்காமல் வந்துவிட்டதாக தெரிவித்த அவர், தற்போது தேசிய புலனாய்வு அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளார். ஆரீப் மஜீத் மற்றும் ஷேக் ஆகிய இருவரின் தந்தைகளும் வைத்தியர்கள் என்பதும், ஷேக் பொறியியல் படித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## புதிய தலைநகருக்கு மக்களிடம் நிதிகேட்கிறார் ஆந்திர முதல்வர்

(சென்னை)

ஆந்திர மாநில புதிய தலைநகர் அமைக்க பொதுமக்கள் மாதத்தில் ஒருநாள் ஊதியத்தை தர முன்வரவேண்டுமென முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு கோரிக்கை விடுத்துள்ளார்.

தெலுங்கு வருடப்பிறப்பான யுகாதி பண்டிகை நேற்று முந்தினம் கொண்டாடப்பட்டது.

இதற்காக ஆந்திர மாநிலத்தின் புதிய தலைநகர் அமைய உள்ள குண்டூர் மாவட்டம் அனந்தவரம் பகுதியில் அரசு சார்பில் யுகாதி விழா நடைபெற்றது. இதில் சந்திரபாபு நாயுடு பங்கேற்று பேசியதாவது, தலைநகருக்காக தங்களது நிலங்களை அரசுக்கு வழங்கிய இந்த பகுதி மக்களை என் வாழ்நாளில் மறக்கமாட்டேன். ஒருவருக்கு கூட அநீதி நடக்காமல் பார்த்து கொள் வேன். ஆந்திர மாநிலத்தில் 2 அல்லது 3 நகரங்கள் ஐதராபாத்தை போல் உருவாக்கப்படும்.

மாநில தலைநகரம் சிங்கப்பூர், ஜப்பான், ஜேர்மனி போன்று அனைவரும் வியக்கும்படி அமையும். புதிய தலைநகர் அமைக்க பொதுமக்கள் அனைவரும் மாதம்தோறும் தங்கள் ஒருநாள் ஊதியத்தை தர முன்வர வேண்டும். இவ்வாறு முதல்வர் சந்திரபாபு நாயுடு மேலும் தெரிவித்தார். (இ-5)

## இளைஞரை நிர்வாணமாக்கி கழுதை மீது ஏற்றிய மக்கள்

(டில்லி)

15 வயது சிறுமியை பலாத்காரம் செய்ததாக 19 வயது இளைஞர் ஒருவர் மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இதனிடையே ஊர் மக்கள், அந்த இளைஞரை நிர்வாணமாக்கி கழுதை மீது அமர்த்தி ஊர்வலமாக சுற்றவைத்து தண்டனை கொடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் மகாராஷ்டிரா மாநிலத்தில் கடந்த வாரம் நடந்ததாக பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

தன்னை பலாத்காரம் செய்ததாக கடந்த வெள்ளிக்கிழமை இரவு சுபம் பராடியா என்பவர் மீது 15 வயது சிறுமி புகார் கொடுத்துள்ளார்.

இந்த புகாரின்பேரில் 376 ஆவது பிரிவின் கீழும் (பலாத்கார தண்டனை)பாலியல் குற்றங்களிலிருந்து சிறுமிகளை காப்பாற்றுதல் சட்டத்தின் கீழும் அந்த இளைஞர் மீது வழக்கு தொடர்ந்துள்ளதாக பிங்கர்முகாம் பொலிஸ் நிலைய அதிகாரி கங்குர்டே தெரிவித்தார்.

தன்னை தொடர்ச்சியாக பலாத்காரம் செய்ததுடன், அதை வீடியோ படமாகவும் அந்த இளைஞர் எடுத்து வைத்துள்ளார். இந்தச் சம்பவத்தை யாரிடமாவது சொன்னால், அந்த வீடியோ படத்தை வெளியிட்டு விடுவேன் என்று மிரட்டியதாகவும் அந்தச் சிறுமி கூறியுள்ளார்.

இதனிடையே, கடந்த வாரத்தில் அகமது நகர் மாவட்டம், வாம்போரி கிராமத்தில் குற்றம்செய்தவர் என புகாருக்கு ஆளான இளைஞரை கிராமமக்கள் நிர்வாணமாக்கி கழுதை மீது அமரவைத்து செருப்பு மாலை அணிவித்து தெருவில் சுற்றவைத்தனர். மேலும் அந்த இளைஞரின் குடும்பத்தாரையும் தாக்கியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக இதுவரை 17 பேரை கைதுசெய்துள்ளதாக கங்குர்டே தெரிவித்தார்.

வேற்று சாதியைச் சேர்ந்தவர் அந்த சிறுமி. இருவருக்கும் இடையே பழக்கம் இருந்ததை ஊர்மக்கள் கண்டித்து வந்ததாக தெரிகிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## நாடாளுமன்ற வளாகத்தில் பயங்கர தீவிபத்து



நாடாளுமன்ற வளாகத்தில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டதால் நேற்று முன்தினம் பரபரப்பு நிலவியது.

நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள ரயில் பவனில் பெரும் தீவிபத்து ஏற்பட்டது. கரும் புகையை கக்கியபடி தீ பற்றி எரிந்ததால் [illegible] எரியும் தீச் சுவாலைகள் கட்டடத்திற்கு வெளியேயும் தெரிந்ததால் அதை சுற்றியுள்ள பிரதேசம் முழுவதும் புகை மூட்டமாக காணப்பட்டது.

10 வாகனங்களுடன் தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து வந்து தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். ரயில் பவனில் ரயில்வே அமைச்சகம் அமைந்துள்ளது. இதன் அருகே உள்ள துணை மின் நிலையத்தில் தீப்பிடித்ததாக கூறப்படுகின்றது.

தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அவலங்களை வெளிக்கொணர சர்வதேச ஊடகங்கள் தவறிவிட்டன

## இந்தியா ருடேக்கு ரவிகரன் சுட்டிக்காட்டு

**இங்கு நடந்தது ஒரு அமைப்புக்கு எதிரான போர் அல்ல. இனத்திற்கு எதிரான போர். தமிழ் மக்களுக்கு எதிரான போர் என்பதால் தான் படையினர் இன்னமும் தமிழர் பகுதிகளில் நிலை கொண்டிருக்கிறார்கள் என்று அண்மையில் இந்திய ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

தமிழர்களுக்கு எதிரான இந்தப் போரை வெளிக்கொண்டு வருவதில், பல பொறுப்பு வாய்ந்த சர்வதேச ஊடகங்கள் தங்கள் கடமையை ஆற்ற தவறிவிட்டன என்றும் அவர் தெரிவித்தார்.



முல்லைத்தீவில் "இந்தியா ருடே" ஊடகம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரனிடம் தமிழ் மக்களின் தற்கால அரசியல் சூழல் தொடர்பில் செவ்வி கண்டிருந்தனர்.

இதன் போது ரவிகரனால் தமிழர்கள் தற்போது எதிர்நோக்கும் பல்வேறு சிக்கல்கள் பற்றி விளக்கிக் கூறப்பட்டது. இது குறித்து அவர் கூறியதாவது.

வன்னியில் நடைபெற்ற போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த நிலையிலும் படையினர் தமிழர் பகுதிகளில் நிலை கொண்டிருக்க வேண்டிய தேவை என்ன?

ஏனெனில் இங்கு நடந்தது ஒரு அமைப்புக்கு எதிரான போர் அல்ல. தமிழ் இனத்திற்கு எதிரான போர். அது தற்போதும் நடைபெறுகிறது. தற்போது அது கட்டமைக்கப்பட்ட இன அழிப்பாக நடைபெறுகிறது.

தமிழர் கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறிய வகையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன் பிடிப்பதால், தமிழ் மீனவர்கள் பெரும் வாழ்வாதார நெருக்கடிகளை எதிர்நோக்குகிறார்கள்.

தமிழரின் ஏராளமான வயற்காணிகள் மணலாறு உள்ளிட்ட பல பகுதிகளில் விடுவிக்கப்படாமல் இருப்பதால் விவசாயமும் பாதிக்கப்படுகிறது. இதனால் இடம்பெயரும் நிர்ப்பந்தம் தமிழர் மேல் திணிக்கப்படுகிறது.

தமிழர்கள் இங்கு எதிர்கொள்ளும் அவலங்களை வெளிக்கொண்டு வருவதில் பல பொறுப்பு வாய்ந்த சர்வதேச ஊடகங்கள் தங்கள் கடமையை ஆற்ற தவறிவிட்டன. குறிப்பாக எம் மக்கள் மலை போல் நம்பியிருந்தது இந்தியாவைச் சேர்ந்த ஊடகங்களைத்தான்.

மேலும் தமிழர் தாயகத்தில் நடைபெறும் நில அபகரிப்பு பற்றிய முழுமையான விபரங்கள், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகள் உள்ளடங்கலான பல சமகால அரசியல் சூழல் தொடர்பில் ஆதாரங்களுடன் ரவிகரன் கருத்துக்களை முன்வைத்துள்ளார். (அ-2)




## வரவுக்குழுக்களை வலுப்படுத்தல் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களின் வரவை அதிகரித்து 100 வீதமாக மாற்றுவது தொடர்பான வேலைத்திட்டத்தின் ஊடாக வரவுக் குழுக்களை வலுவாக்குதல் எனும் தொனிப் பொருளினாலான (ஆசிரியர்களுக்கானது) செயலமர்வு கோட்டங்கள் ரீதியாக நடைபெறவுள்ளது என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

எஸ்.ஏசி இற்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கு கோட்ட ரீதியாக நடைபெறவுள்ள இச் செயலமர்வு நாளை செவ்வாய்க்கிழமை மு/ ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு ஒட்டுசுட்டான் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை மு/ பாலிநகர் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு மாந்தை கிழக்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை மு/ மல்லாவி மத்திய கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு துணுக்காய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும் நடைபெறவுள்ளது.

செயலமர்விற்கு வருகை தரவுள்ள ஆசிரியர்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள செயலமர்வு தொடர்பான அழைப்புக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களையும் தரவுகளையும் தவறாது எடுத்து வர வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

## வவுனிக்குள நீர்ப்பாசனத்தில் 2348 ஏக்கரில் சிறுபோகம்

### கூட்டத்தில் தீர்மானம்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள வவுனிக்குளத்தின் நீரைப் பயன்படுத்தி நடப்பாண்டில் 2 ஆயிரத்து 348 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளவுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற சிறுபோக நெற்செய்கைக்கான கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது வவுனிக்குளத்தின் நீர் மட்டம் 21 அடி 6 அங்குலமாகவுள்ள நிலையில் வவுனிக்குளத்தின் மத்திய துருசு பகுதியூடாக 68 ஏக்கரிலும் இடதுகரை வாய்க்கால் பகுதியில் ஆயிரத்து 210 ஏக்கரிலும் வலதுகரை வாய்க்கால் பகுதியில் 925 ஏக்கரிலுமாக மொத்தம் 2 ஆயிரத்து 203 ஏக்கர்களில் விவசாயிகளுக்கு தலா ஒரு ஏக்கர் வீதம் சிறுபோக பங்கு விநியோகம் நடைபெறும்.

பொது பங்கு விநியோகமானது 145 ஏக்கரில் இம்முறை விநியோகிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விதைப்புத் திகதியானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி எனத் தீர்மானிக்கப்பட்டது.

நெல் விதைப்பு முடிபுத் திகதி மே மாதம் 10 ஆம் திகதி எனவும் 3- 3 1/2 மாத இன நெல் வர்க்கங்களே விதைக்கப்பட வேண்டும் எனவும் நீர் வழங்கும் கடைசித் திகதி ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கால்நடைகளை ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை கட்டி வளர்த்தல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2-15)

## நியமனம் கோரி சுகாதார தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

வவுனியா நகர சபையின் சுகாதார ஊழியர்கள், நிரந்தர நியமனம் வழங்கக்கோரி நேற்று முன்தினம் வவுனியா நகரசபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



வவுனியா நகரசபையில் சுகாதார ஊழியர்களாக கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வருகின்ற 7 சுகாதார ஊழியர்களே நிரந்தர நியமனம் வழங்கப்படாததைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை 7 சுகாதார ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என பல தடவைகள் வடக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளால் உறுதிமொழி வழங்கப்பட்டபோதும் இதுவரை நியமனம் வழங்கப்படவில்லையென இவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமக்கான நிரந்தர நியமனம் வழங்காதுவிட்டால் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் நேற்று முன்தினம் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது தமக்கு நியமனம் வழங்கப்படாது புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்து சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்களுடன் இணைந்து புகையிரத கடவையில் காவலாளிகளாக நியமிக்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்படாத ஊழியர்களும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்ட ஊழியர்களை சந்தித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் ஆர்ப்பாட்டம் நடத் தியவர்களுடன் கலந்துரையாடியதோடு பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுடன் வன்னி நாடாளு மன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோர் கலந்துரையாடினர். (அ-2-250)

## சங்காபிஷேகம்

(பனிக்கன்குளம்)

பனிக்கன்குளம் ஞான வைரவர் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும்.

இதில் இரவு 8 மணிக்கு விசேட பூசைகள் நடைபெற்று சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (அ-2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கம் என்பது முதலில் ஒட்டடை ;
பிறகு இரும்புச் சங்கிலி
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குடிக்கலாமோ... குடிக்கலாமோ... பொறுப்புக் கூறுவார் யாரோ?

தண்ணீரின் மகத்துவம் - முக்கியத்துவம் உணராதவர் இருக்க முடியாது. சிவப்பரம்பொருள் தனது சடாமுடியில் கங்கையைக் கொண்டுள்ளார். இந்த உலகம் வாழ்வதற்கு நீர் அவசியம் என்பதை உணர்த்தவே சிவப்பரம்பொருள் கங்கையைச் சடையில் வைத்தார் எனலாம்.

இறைவனின் படைப்பில் முதன்மையானது எது? என்றால் தண்ணீர் என்பதே அதற்கான பதிலாக இருக்கும் என்பதை உணர்த்துவதற்காகவும் ஆடலரசன் கங்கையை சடையில் வைத்துள்ளான் என்றும் கூறிக்கொள்ளலாம்.

ஆக, தண்ணீர் என்பது உயிர் வாழ்வதற்கான ஆதாரம். அதிலும் சுத்தமான நீர் என்பது மிகப்பெரியதொரு கொடை.

புண்ணியம் செய்வார்க்குப் பூ உண்டு; நீர் உண்டு எனத் திருமுறை செப்பும். நம் முன்னோர்கள் தாகசாந்தி நிலையங்களை அமைத்து வீதியில் போகின்றவர்களின் தாகம் தீர்த்த புண்ணியம் அளப்பெரியது. புண்ணியம் செய்வார்க்கு நீர் உண்டு என்பதன் பொருள் தாகசாந்தியைத்தான் குறிக்கிறதோ என்று எண்ணத் தோன்றும்.

வள்ளுவப் பெருமானும் **நீரின்றி அமையாது உலகு...** எனக் குறள் தந்துள்ளார்.

ஆக, தண்ணீர் என்பது இறைவனின் படைப்பில் முதன்மையானது என உணர முடியும்.

எனினும் இப்போது வடபுலத்து மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளில் குடிநீர்ப் பிரச்சினை பாரியதாகவுள்ளது.

சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் ஏற்பட்ட கழிவொயில் பரவுகை அயல் பிரதேசம் முழுவதையும் பாதித்தது.

இதனால் மக்கள் தமது வீட்டுக் கிணற்று நீரை குடிக்க முடியாத நிலைமை ஏற்பட்டதுடன் கழிவொயில் கலந்த தண்ணீரை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்துவதும் ஆபத்தானதென்ற அச்சத்தில் உள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், கழிவொயில் கலந்த தண்ணீர் தொடர்வில் யாழ்.மாவட்டத்தின் தூய நீருக்கான விசேட செயலணி ஒரு பகிரங்க அறிவித்தலை வெளியிட்டுள்ளது. அந்த அறிவித்தலில்,

நிலத்தடி நீரில் கலந்த எண்ணெய் மாசு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்குழு, செய்த ஆய்வின் முதற்கட்ட முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி கழிவு எண்ணெய் கலந்த நீரில், உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனக் கூறுகள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனினும் நிபுணர்குழுவின் முடிவை பொதுமக்கள் ஏற்றுக்கொள்வது என்பது உடனடிச்சாத்தியமாகக் கூடியதன்று.

எனவே ஆய்வு செய்த நிபுணர் குழுவின் அறிக்கையோடு, கழிவு எண்ணெய் கலந்த நீரில் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் ஆபத்தில்லை என்பதை உறுதி செய்ய முற்பட்டால்; அது பாரதூரமான விமர்சனத்தை - கருத்தியலை மக்கள் மத்தியில் உருவாக்கும்.

ஆகையால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் நிபுணர் குழு அல்லது அவர்களின் பிரதிநிதிகள் நிலைமையை தெளிவுபடுத்த வேண்டும். உண்மைத் தகவல்கள் பொதுமக்கள் மத்தியில் தெரியப்படுத்துவதே நல்லது.

ஏனெனில் கழிவு ஒயில் கலந்த தண்ணீரை பருகும் போது அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் ஆபத்தானவை என யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம் எச்சரிக்கை செய்துள்ளது.

எனவே தண்ணீர் தொடர்பில் வெளியிடப்படும் ஆய்வுகள், அவற்றின் முடிவுகள் குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கருத்து வெளியிட்டு பொறுப்புக் கூறுதலுக்கு உதவ வேண்டும்.

# எதிர்க்கட்சித் தலைவர் எப்படி அரசாங்கத்தை விமர்சிப்பார்?

## அமைச்சுப்பதவிகளும் அவர்களிடம் உள்ளதே? - விமல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பதவிகளை பெற்றுக்கொண்டு தேசிய அரசாங்கத்தில் இணைந்ததன் மூலம் தமக்கு வாக்களித்த சக்திகளை காட்டிக் கொடுத்துள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சு பதவிகளை வழங்கியதன் மூலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் வாலாக மாற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஏனைய கட்சிகளின் வாக்குகளினால், மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவாகவில்லை.

ரணில் விக்ரமசிங்க, ஆர். சம்பந்தன், ரவூப் ஹக்கீம், அனுரகுமார திஸாநாயக்க, சம்பிக்க ரணவக்க போன்றவர்களினால், அவர் ஜனாதிபதியானார்.

இதனால், தன்னை ஜனாதிபதி பதவியில் அமர்த்திய, குறிப்பாக. ரணில் விக்ரமசிங்கவுக்கு நம்பிக்கையில்லா தீர்மானங்களில் வீழ்த்த முடியாத ஸ்தீரமான அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் தேவை மைத்திரிபால சிறிசேனவுக்கு இருக்கின்றது.

பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தில் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவிக்கு தெரிவாகவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அமைச்சரவைக்குள் கொண்டு வந்து, ஏனையோருக்கு ராஜாங்க அமைச்சர் பதவிகளை வழங்கி, தேர்தலுக்கு முன்னர், மைத்திரிபால சிறிசேனவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் ஏற்படுத்தி கொள்ளப்பட்ட நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்க பார்க்கின்றனர். இதுவே அதன் ஒரே நோக்கம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சு பதவிகளை பெற்றுக்கொள்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வைத்து கொண்டுள்ளது. இது மிகவும் ஆச்சரியமான வேலை.

அமைச்சு பதவிகளை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தம்மிடம் வைத்து கொண்டு அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியை தன்வசம் வைத்து கொண்டு தான் சொல்லுப்படி நடக்கும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர்.

இப்படியான நிலைமையில், எதிர்க்கட்சித் தலைவர் எப்படி அரசாங்கத்தை விமர்சிப்பார்? அது கண்ணாடிக்கு எதிரில் சென்று தன்னை தானே விமர்சிப்பதற்கு ஒப்பானது.

அரசாங்கத்தின் ஜனாதிபதியும், அமைச்சர்களும் தமது கட்சியை சேர்ந்தவர்களாக இருக்கும் போது எப்படி அரசாங்கத்தை விமர்சிக்க முடியும் எனவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (செ)

# இரட்டைக் குடியுரிமை பெற இன்றிலிருந்து விண்ணப்பிக்கலாம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நான்கு வருடங்களுக்கு பின்னர் இன்று முதல் இரட்டை குடியுரிமை விண்ணப்பங்களை மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் ஒழுங்குத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க இதனை அறிவித்துள்ளார். இரட்டை குடியுரிமைக்காக இதுவரை சுமார் 300 பொதுமக்கள் விண்ணப் பித்துள்ளனர்.

இவர்களின் விண்ணப்பங்களும் புதிய விண்ணப்பங்களுடன் பரிசீலிக்கப் படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள் ளார்.

இரட்டை குடியுரிமை விண்ணப்பங்களின்போது வயது வந்தவர்களுக்கு 250,000 ரூபாய் அறிவிடப்படும். முன்னர் இது 5 இலட்சமாக இருந்தது.

22 வயதுக்கு குறைந்தவர்களுக்கு 50ஆயிரம் ரூபாய் அறிவிடப்படவுள்ளது. இந்தநிலையில் இரட்டை குடியுரிமைக்கான தகுதிகள் தொடர்பான விபரங்கள் குடிவரவு, குடிய கல்வு திணைக்கள இணையத்தளத் தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே இரட்டை குடியுரிமை பெற்றுள்ள சுமார் 2000 பேர் தொடர்பில் தற்போது விசாரணைகள் இடம் பெறுகின்றன.

இதன்போது எவராவது குற்றமுள்ளவராக இனங்காணப்பட்டால் அவரின் இரட்டைக் குடியுரிமை ரத்துச் செய்யப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (செ)

# 100 நாட்கள் முக்கியமல்ல - அமில தேரர்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய 100 நாள் வேலைத்திட்ட வாக்குறுதிகளை 100 நாட்களுக்குள் மட்டுப்படுத்த தேவையில்லை என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் அமில தேரர் தெரிவித்துள்ளார்.

வானொலி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இவ்வேலைத் திட்டத்தில் மிக முக்கியமாக நிறைவேற்றப்பட வேண்டியது பொது தேர்தல் அல்ல, மக்களின் எதிர்பார்ப்புகளே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

100 நாட்கள் என்பது முக்கியம் அல்ல மேலதிகமாக 200 நாட்கள் அல்லது 300 நாட்களை எடுத்துக்கொண்டாலும் பரவாயில்லை. ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே முக்கியம் என அவர் கூறியுள்ளார்.

மேலும் பொது தேர்தலுக்கு தற்பொழுது எவ்வித அவசரமும் இல்லை என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் அமில தேரர் குறிப்பிட்டுள்ளார். (செ)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## செயல் விளைவுத் தத்துவம்



உடல் மன ஆற்றல்களை, இயற்கையாற்றல்களுக்கு உட்படுத்தியும் ஒத்தும் செயற்படுத்தினால்- பேரறிவையும், பேராற்றலையும் இயல்பாகக் கொண்ட இயற்கையானது உறுதுணை யாகவும் பாதுகாப்பாகவும் வழிநடத்தியாகவும் வெற்றி மற்றும் மகிழ்ச்சி அளிப்பதாகும் அமையும் என்பதே வாழ்வின் பயன்களை ஆழ்ந்து சிந்தித்துக் கண்ட தெளிவாகும்.


இதுவே தன்முனைப்பின் அடக்கம், தன்முனைப்பு அடங்கப் பெற்ற மனிதனுக்கு இறைநிலையின் பேராற்றலும் பேரறிவும் சொந்தமாகி விடுகின்றன. இந்த உண்மையினைப் பேரறிஞர் வள்ளுவப் பெருந்தகை எவ்வாறு உணர்த்தியிருக்கிறார் என்று அவர் அருளியுள்ள ஒரு குறளின் மூலம் உணரலாம்.

அடக்கம் அமர்அருள் உய்க்கும் அடங்காமை
ஆர் இருள் உய்த்துவிடும்

தனிவுனிதன், மனித சமுதாயம், மனிதகுலம் எவரெனினும் அடக்கம் என்ற உயர் நெறியை உணராமலும் அதன் வழியே வாழாமலும் அடங்காமை என்ற குழியில் விழுந்து அதனால் விளையும் பெருகும் துன்பங்களே மனித குல வாழ்க்கைத் துன்பங்கள் ஆகும். இயற்கை நியதியை அறியாமலா, அலட்சியம் செய்தோ, உணர்ச்சி வசப்பட்டோ மனிதன் செயலாற்றும்போது ஏற்படும் விளைவுகள் தான் துன்பங்கள், பொருளிழப்பு, ஏழ்மை, நோய்கள், உறுப்பிழப்பு, அகால மரணம் ஆகிய அனைத்துக் கேடுகளுமாகும். செயல்- விளைவுத் தத்துவத்தில் முதல்பாடம் இதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்டனாக மிஸ்பா 3 ஆயிரம்



பாகிஸ்தான் அணி கப்டனாக விளையாடிய ஒருநாள் போட்டிகளில் மிஸ்பா 3003 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இந்த சாதனை மைல் கல்லை எட்டும் 2வது பாக். கப்டன் என்ற பெருமை அவருக்கு கிடைத்துள்ளது. முன்னதாக, இம்ரான் கான் கப்டனாக 3247 ஓட்டங்கள் எடுத்துள்ளார். பல அணிகளை சேர்ந்த 16 கப்டன்கள் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

# பங்களாதேஷ் கிரிக்கெட் தொடருக்கு பாகிஸ்தான் அரசாங்கம் அனுமதி

இந்தியா- பாகிஸ்தான் இடையேயான கிரிக்கெட் போட்டி எப்படி முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே போல் பாகிஸ்தான்- பங்களாதேஷ் இடையேயான தொடரும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இந்த நாடுகளுக்கிடையேயான போட்டி கிரிக்கெட்டைத் தாண்டி அரசியல் முக்கியத்துவமும் வாய்ந்ததாகும்.

ஏனெனில் வீரர்கள் பாதுகாப்பு குறித்து கேள்விகள் எழுப்பப்படுவதால் இருநாட்டு அரசும் போட்டி நடத்த அனுமதி வழங்க யோசிக்கும். இந்த நிலையில் பாகிஸ்தான் அணி பங்களாதேஷம் சென்று விளையாட அந்நாட்டு அரசு அனுமதி அளித்துள்ளது. அத்துடன் பாதுகாப்பு குழுவையும் அனுப்ப தீர்மானித்துள்ளது.


இதுகுறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் சீனியர் மீடியா மானேஜர் ரஸா கிட்ச்லெவ் கூறும் போது, "பாகிஸ்தானைப் பற்றி பங்களாதேஷத்தில் எதிர்மறையான சிந்தனை இருப்பதால் அரசு தனது கவலையை தெரிவித்துள்ளது.

ஆனால், நாங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டு கிரிக்கெட் என்ற நிலைப்பாட்டையே எப்போதும் கொண்டிருப்பதால், பங்களாதேஷத்தில் விளையாட ஒப்புதல் அளித்தோம்.

இந்த தொடருக்கான ஏற்பாடுகளை செய்வதற்காக, இன்னும் சில நாட்களில் எங்களுடைய பாதுகாப்பு குழுவை பங்களாதேஷ் அனுப்பி, பாகிஸ்தான் தூதருடன் ஆலோசனை நடத்த இருக்கிறோம்" என்றார்.

பாகிஸ்தான் அணி ஏப்ரல் மாதம் பங்களாதேஷ் சுற்றுப்பயணம் செய்து இரண்டு டெஸ்ட், மூன்று ஒருநாள், ஒரே ஒரு 20 ஓவர் போட்டிகளில் விளையாட இருக்கிறது. இந்த தொடர் ஏப்ரல் 15ஆம் திகதி தொடங்க இருக்கிறது. (க)

# மே.தீவுகளின் குப்பையான பந்துவீச்சே தோல்விக்கு காரணம் - பிரைன் லாரா



உலக கோப்பை கிரிக்கெட்டில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் மேற்கிந்திய தீவுகளின் பந்து வீச்சை நியூசிலாந்து அணி ஊதித் தள்ளியது. அந்த அணியின் மார்டின் குப்தில் அபாரமாக ஆடி 237 ஓட்டங்கள் எடுத்து சாதனை படைத்தார்.

இந்நிலையில், வெலிங்டனில் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு முன்னாள் மேற்கிந்திய தீவுகளின் கப்டன் பிரைன் லாரா அளித்த பேட்டியில் "உலக கிரிக்கெட்டில் மேற்கிந்திய தீவுகள் அணியின் குப்பையான பந்து வீச்சு" என்று ஆத்திரத்துடன் கூறினார். "நியூசிலாந்து வலிமையான அணி தான். ஆனால், மேற்கிந்தியத் தீவுகள தனது வலிமையை வெளிக் காட்டவே இல்லை, ஆட்டம் கடினமாக மாறிய நிமிடத்திலேயே மேற்கிந்திய தீவுகள் சுருண்டு விட்டது" என்றார்.

முன்னணி பட்ஸ்மேன்கள் பொறுப்புடன் ஆடவில்லையென்றும், அவர்கள் ஆடிய விதம் மிகுந்த ஏமாற்றமளித்ததாகவும் லாரா தெரிவித்தார்.

முன்னாள் அவுஸ்திரேலிய கப்டன் இயன் சேப்பல் போட்டி குறித்து கூறுகையில் "ஒரு காலத்தில் மேற்கிந்திய தீவுகள் அனைத்து அணிகளுக்கும் பலத்த அடி கொடுக்கும் வலிமையான அணியாக இருந்தது. ஆனால் இன்று... அவர்களின் வெளியேற்றத்தை பார்க்கையில் வருத்தமாக இருக்கிறது." என்றார். (க)

SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நெடியகாடு இளைஞர் கழக உதைபந்தாட்ட தொடர்




நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் (Jaffna Challengers Cup) உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் 20 ஆம் திகதி நடைபெற்ற சுப்பர் 8 ஆட்டத்தில் உடற்கல்வி ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அன்ரனிஸ் அணி சார்பாக கலிஸ் டன், கஜானன் தலா ஒவ்வொரு கோலினையும் உடற்கல்வி அணி சார்பாக ராகவன் ஒரு கோலினையும் பெற்றுக் கொணடனா.

நடைபெற்ற மற்றொரு சுப்பர் 8 ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டு கழகத்தை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மேரிஸ் அணி சார்பாக அண்டனிஜ்னிற்றன், நிதர்சன் தலா ஒவ்வொரு கோலினையும் பெற்றுக்கொண்டனர்.

நடைபெற்ற மற்றொரு சுப்பர் 8 ஆட்டத்தில் கலைமதி விளை[illegible]டுக் கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி விளையாடியது. இரு அணிகளும் தலா 2 கோல்களை பெற்றன. கலைமதி அணி சார்பாக சிந்துஜன், விஜேந்திரன் தலா ஒவவொரு கோல்களையும் யங்கம்கன்ஸ் அணி சார்பாக குகரதன், கமலேஸ்வரன் தலா ஒவ்வொரு கோல்களையும்பெற்றுக்கொண்டனர். (க)

# அவுஸ்திரேலியாவை வீழ்த்துவதற்கு எதிரிக்கு கைகொடுக்கும் பாகிஸ்தான்



உலகக்கிண்ண அரையிறுதியில் இந்தியா, அவுஸ்திரேலியாவை வீழ்த்த பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா- உல்- ஹக் சில ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரின் அரையிறுதியில் இந்தியா, எதிர்வரும் 26ஆம் திகதி சிட்னி மைதானத்தில் அவுஸ்திரேலியாவை சந்திக்கிறது.

இந்நிலையில், இந்த மோதல் குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா கூறுகையில், சிட்னி மைதானம் சுழற்பந்துக்கு சாதகமான மைதானமாகும். இதே மைதானத்தில் தான் இலங்கைக்கு எதிராக தென்னாபிரிக்காவின் இம்ரான் தாகிர் 4 விக்கெட்டுகளையும், டுமினி 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

அவுஸ்திரேலியா, எப்போதுமே சுழற்பந்து வீச்சில் திணறும் ஒரு அணியாகும். எனவே, சுழற்பந்து என்னும் ஆயுதத்தால், அவுஸ்திரேலியாவை, இந்தியா கட்டுப்படுத்த முடியும்.

இந்த உலகக்கிண்ணத்தில் இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய இரு அணிகளுமே, சிறப்பாக விளையாடி வருவதால், இந்த மோதல் கடுமையானதாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

சிட்னி மைதானம் சுழற்பந்து வீச்சாளருக்கு கைகொடுப்பது போல துடுப்பாட்டக்காரர்களுக்கும் சொர்க்கபுரியாக விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஓய்வு எண்ணம் இல்லை



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் வெலிங்டனில் நடந்த 4ஆவது கால் இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்திடம் தோல்வி கண்டு அரை இறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது. இந்த தோல்விக்கு பின்னர் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான 35 வயது கிறிஸ்கெய்ல் அளித்த பேட்டியில், 'காயத்தால் நான் அவதிப்பட்டு வருவது உண்மை தான். ஆனாலும் நான் எந்த வடிவிலான கிரிக்கெட் ஆட்டத்திலும் இருந்து ஓய்வு பெறும் திட்டம் இல்லை.

எதிர்வரும் 2016ஆம் ஆண்டு நடைபெறும் 20 ஓவர் உலக கோப்பை போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக விளையாட விரும்புகிறேன். உலக கோப்பை போட்டியில் எங்கள் அணி சிறப்பாகவே செயற்பட்டது' என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அமை...

அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு ஜனாதிபதியின் செயலகத்தில் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றது. இதன் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 11 பேர் அமைச்சரவை அமைச்சர்களாகவும், 5 பேர் இராஜாங்க அமைச்சர்களாகவும், 10 பேர் பிரதி அமைச்சர்களாகவும் பதவியேற்றனர்.

**அமைச்சர்கள்**

ஏ.எச்.எம்.பௌசி - அனர்த்த முகாமைத்துவ அமைச்சர், எஸ்.பி.நாவின்ன - தொழில் அமைச்சர், எஸ்.பி.திஸாநாயக்க - கிராமிய விவகார அமைச்சர், ஜனக பண்டார தென்னக்கோன் - உள்ளூராட்சி மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர், பிலிக்ஸ் பெரேரா - விசேட திட்டமிடல் அமைச்சர், மகிந்த யாப்பா அபேகுணவர்தன - பாராளுமன்ற விவகார அமைச்சர்,

ரெஜினோல்ட் குரே - விமான சேவை அமைச்சர், விஜித் விஜயமுனி சொய்சா - நீர்ப்பாசன அமைச்சர், மகிந்த அமரவீர - மீன்பிடி துறை அமைச்சர், சரத் அமுனுகம - உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைச்சர், பியசேன கமகே - தொழிற் பயிற்சி திறன் விருத்தி அமைச்சர்,

**பிரதியமைச்சர்கள்**

திஸ்ஸ கரலியத்த- புத்தசாசனம் பிரதியமைச்சர், தயாசிரித்த திசேரா - மீன்பிடி பிரதியமைச்சர், ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய - உள்நாட்டு பிரதியமைச்சர், லக்மன் செனவிரட்ன - இடர்முகாமைத்துவ பிரதியமைச்சர்,

லக்ஷ்மன் யாப்பா - விமான பிரதியமைச்சர், லலித் திஸாநாயக்க- நீர்ப்பாசனம் பிரதியமைச்சர்,ஜெகத் புஸ்பகுமார - பெருந்தோட்டத்துறை பிரதியமைச்சர்

லசந்த அழகியவன்ன - கிராமிய அபிவிருத்தி பிரதியமைச்சர், சுதர்சினி பெர்ணான்டோபுள்ளே- உயர் கல்வி பிரதியமைச்சர்,சாந்த பண்டார - ஊடகம் பிரதியமைச்சர்,

**இராஜாங்க அமைச்சர்கள்**

பவித்ரா வன்னியாராச்சி - சுற்றுசூழல், ஜீவன் குமாரதுங்க- தொழிலாளர் விவகார, மஹிந்த சமரசிங்க - நிதி,சீ.பீ. ரத்நாயக்க - அரச நிர்வாகம் மற்றும் ஜனநாயகக் கட்டுப்பாடு, டிலான் பெரேரா - வீடு மற்றும் சமுர்த்தி விவகாரம் ஆகியோர் பதவி ஏற்றனர்.

இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் நோக்குடனேயே இவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்திய பேச்சுக்களையடுத்தே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் இணைத்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொள்வதற்கு இணக்கம் காணப்பட்டதாக கூறப்படுகிறது.

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மூத்த உறுப்பினர்களான நிமால்சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, அனுர பிரியதர்ஷன யாப்பா போன்றோர் அமைச்சரவையில் சேர்க்கப்படவில்லை.

ஆனாலும் நிமல் சிறிபால டி சில்வா தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவராக செயல்படுவார் என தொழி லாளர் நலத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் தேசிய அரசாங்கம் ஒன்றே நடைமுறையில் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வழிசெய்யும் அரசியல் அமைப்பின் 19-வது சட்டத்திருத்தத்துக்கு அமைச்சரவை கடந்தவாரம் ஒப்புதல் அளித்திருந்த நிலையில், அதை மீறும் வகையில் கூடுதல் அமைச்சர்கள் நேற்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## ஆளும் கட்சி...

ச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ராஜாங்க அமைச்சர்களாக நேற்று பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நிகழ்வில் பங்கேற்ற போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற ஆளும் எதிர்க்கட்சி என்ற பேதம் பாராட்டாது பணியாற்ற சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

19-ம் திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றிற்கு கொண்டு வரவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் திருத்தங்களை செய்யவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பங்குதாரராக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாட்டின் பிரச்சினைகளுக்கு அனைத்து தரப்பினரும் இணைந்து தீர்வு வழங்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.

அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (செ)

## ஒருவாரத்...

யில், அவர் தேசிய அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பு ஆணைக் குழுவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டமை இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் ஏற்பட்டுள்ள ஒரு தற்காலிக பின்னடைவாகும்.

முதலீட்டாளரால் பெறப்பட்ட பல்வேறு அனுமதிகளை மீளாய்வு செய்வதற்கே இத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான நீண்டகால உறவுகளில் இது தாக்கத்தை ஏற்படுத்தாது. இத்திட்டம் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு இன்னும் ஒரு வாரத்துக்குள் தீர்வு காணப்பட்டுவிடும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ)

## அரசு ஒருகை...

முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளனவா என்று எண்ணத்தோன்றுகின்றது என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் ஒரு வாரத்திற்குள் காணிகளை விடுவிப்போம் என கூறியவர்கள் தற்போது ஒருமாதகாலத்திற்கும் மேலாகியும் மௌனமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மக்கள் அனுமதிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ள வசாவிளான் கிராமத்திற்கு நேற்று பிற்பகல் விஜயம் செய்திருந்த முதலமைச்சர் அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடிவிட்டு ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுககு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுவிக்கப்படுவதாக எமக்கு கூறப்பட்ட காணி அளவை விடாமல் குறைந்தளவு காணியைத் தான் அரசு விடுவித்துள்ளது என நான் தற்போது புரிந்து கொண்டுள்ளேன். ஆகவே இதில் அரசாங்கத்தால் சொல்லப்பட்ட காணி அளவு தரப்பட்டதாக தெரியவில்லை.

இதற்கு காரணம் அரசாங்கமா? இராணுவமா? அல்லது இரு தரப்பிற்குமிடையில் ஏதும் பிரச்சினையா வேறு ஏதாவது காரணத்திற்காக இது மாற்றப்பட்டதா? ஏதுவுமே எங்களுக்கு விளங்கவில்லை ஆனால் ஒன்று விளங்குது இந்த பாதையை அடைத்து விடுவதனால் மக்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்படப்போகின்றது.

வசாவிளான் சந்தியில் இருந்து கொஞ்ச தூரம் சென்றவுடன் பலாலி சந்தி வருகின்றது இப்பாதைக்கு குறுக்காக அடைக்கப்பட்டிருப்பதனால் மக்கள் அந்த பக்கம் போக முடியாது. எங்களுக்கு காணியை தந்து விட்டு அண்மையில் உள்ள வீதிக்கு போற வசதிகளை இல்லாமல் செய்து விட்டார்கள்.

ஆகவே ஒரு கையால தந்து இன்னொரு கையால் எடுப்பது போல இந்த அரசின்நடவடிக்கைகள்உள்ளது. இதற்குரிய காரணம் எனக்கு தெரியாது. உரியவர்களுடன் பேசித்தான கூறமுடியும். மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் மூன்று வாரங்களுக்குள் எல்லாம் தரலாம் என அப்போது கூறியிருந்தார். இப்போது ஒரு மாதத்திற்கும் மேலாகிவிட்டது எனக்கு நாளையதினம் (இன்று) ஜனாதிபதி யாழ்ப்பாணம் வருகை குறித்து ஜனாதிபதியிடமிருந்து நேரடியாக அழைப்பு கிடைக்கவில்லை ஒருமணித்தியாலத்திற்கு முன்னர் தான் (நோற்றையதினம்) யாழ்.மாவட்ட அரச அதிபரிடமிருந்து அழைப்பு கிடைத்துள்ளது. ஆகவே நாளைய (இன்றைய) நிகழ்வு என்ன என்பது குறித்தும் எனக்கு தெளிவாக தெரியவில்லை.

உண்மை நிலையை மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் தெரியப்படுத்த வேண்டிய கடமை எம்மிடம் உண்டு. ஆகவே இது தொடர்பில் அனைத்தையும் அறிந்து உண்மை நிலையை அனைவருக்கும் தெரியப்படுத்துவோம் என்றார் முதலமைச்சர்.

இச்சந்திப்பில் மக்கள் தமது பிரச்சினைகளினை முதலமைச்சரிடம் கூறியதோடு இராணுவத்தினை தமது நிலங்களில் இருந்து வெளியேற்றி தமது நிலங்களை மீட்டுத் தருமாறும் கோரிக்கைகளினை முன்வைத்தனர். இவ் மக்கள் சந்திப்பில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், [illegible] உடனிருந்தனர். (செ-4)

## வடக்கு முத...

சென்ற இடத்திற்கு செல்வதற்கான அனுமதியே இவ்வாறு மறுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் மக்கள் மீள்குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்ட இடமானவசாவிளானுக்கு நேற்றையதினம்நேரில் சென்று மக்களினை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

பின்னர் இராணுவத்தால் தற்போது புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீதி தடைக்கு உள்ளே செல்வதற்கு அங்கு நின்ற இராணுவ பொலிசாரிடம் முதலமைச்சரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் மூலம் அனுமதி கோரப்பட்டது. இது தொடர்பில் தான் முடிவெடுக்க முடியாது என கூறிய இராணுவ பொலிசார் தம்முடைய உயர் அதிகாரியிடம் தொலைபேசி மூலம் சிறிது நேரம் கதைத்து விட்டு,

நேரடியாக முதலமைச்சரிடம் வந்து பொறுப்புவாய்ந்த அதிகாரி தற்போது இல்லை எனவும் உள்ளே செல்வதற்கு தம்மால் அனுமதி வழங்க முடியாது எனவும் கூறினார்.

சுமார் பத்து நிமிடங்களுக்கு மேல் காத்து நின்ற முதலமைச்சர் இராணுவத்தின் இப்பதிலை கேட்டதும் அங்கிருந்து திரும்பினார்.

அனுமதி மறுக்கப்பட்ட குறித்த இடத்திற்கு பிரபாத்திலகரத்ன என்ற கொமாண்டருடன் அண்மையில் உள்ளே சென்று இடங்களினை பார்வையிட்டிருந்ததாக செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கும் போது முதலமைச்சர் தெரிவித்தார். (செ-4)

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அழிக்க சிலர் முயற்சி - மகிந்த

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முற்றாக அழித்து விடும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் சூழ்ச்சி செயற்படுத்தப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியன் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

2011 மார்ச் மாதம் தேர்தல் நடத்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் 30 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அவற்றின் பதவிக்காலத்தை நீடித்து, பொதுத் தேர்தலின் பின்னர், உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தல் நடத்துவது என முந்தைய அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இது குறித்து ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டிருந்தன. இந்த நிலையில் உள்ளூராட்சிசபைகளை கலைத்து விட்டு அவற்றை விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் சூழ்ச்சியில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளும் தயார்ப்படுத்தப்பட்டு வரும் சூழ்நிலையில், 278 உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி அதிகாரத்தை கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் பாரிய ஆபத்துக்குள் தள்ளப்பட்டுவிடும்.

உள்ளூராட்சிசபைகளை கலைத்து விட்டு தேர்தல் நடத்தப்படுமாயின், அதனை ஜனநாயக தீர்மானம் என்று எம்மால் பாராட்ட முடியும் என்றார். (செ)

## காணாமல்...

தொடக்கம் 12.00 மணிவரை வடக்கு, கிழக்கில் உள்ள சகல மாவட்டங்களினதும், மாவட்டசெயலகங்களின் முன்பு அமைதி வழி கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

போராட்டத்தின் நிறைவில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றை காணாமல் போனவர்களின் உறவினர்கள் கையளிக்கவுள்ளனர்.

இதில் கிளிநொச்சி மாவட்டத்தில், கிளிநொச்சி ஏ9 வீதியில் உள்ள உதிர வேங்கை வைரவர் கோவிலில் இருந்து பேரணியாக சென்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் முன் அமைதிவழி கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டு அதன் பின்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது. (செ)

## அடுத்த அதி...

பூரணமாக குணமடையாமலோ, சுகவீனமுற்று வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலோ அல்லது அவர் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு விஜயம்மேறகொள்ளும் சந்தர்ப்பங்களில் ஜனாதிபதிக்கு பதிலாக நாட்டின் அரச தலைவராக சபாநாயகர் செயற்படுவார்.

குறித்த சந்தர்ப்பங்களில் சபாநாயகரும் இல்லை என்றால் பிரதி சபாநாயகருக்கு இவ் அதிகாரத்தை வழங்குவதற்கு அரசியலமைப்பு திருத்தத்தினூடாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. (செ)

## மரண அறிவித்தல்



### திருமதி தம்பிராசா பூரணம்

கம்பர்மலையை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா பூரணம் 22.03.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராமு-தெய்வயானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சூரியவதனா மற்றும் சந்திரலிங்கம் (கனடா), சூரியலிங்கம் (இந்தியா), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் சந்திரமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கோபாலவடிவேல் மற்றும் ஜீவமோகினி (கனடா), அருந்தவராணி (இந்தியா), வாசவன் ஆகியோரின் அன்பு மாமியாரும், இரத்தினவடிவேல் (டென்மார்க்), இராசவேல் (சுவிஸ்), காலஞ்சென்ற ஞானவேல், ரஜனன் (கனடா), ஜீவகரன் (கனடா), சோபியா (கனடா), காலஞ்சென்ற ஜீவகான், விநோதன் மற்றும் தபோதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், றொஷான் (டென்மார்க்), ரோகித் (டென்மார்க்), றொசாத் (டென்மார்க்), அபிலாஷ் (சுவிஸ்), அபிராமி (சுவிஸ்), சுவாதி (சுவிஸ்), லக்ஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.03.2015) திங்கட்கிழமை பி.ப 5 மணிக்கு கொக்குவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.கே.கே.வாசகன்
ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி

(9869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலைப்பணியில் 50 ஆண்டுகள் (1965 – 2015)

திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

# அன்பில் மலர்ந்த அமரகாவியம்

(திருப்பாடுகளின் காட்சி)

காலம் : மார்ச் 26, 27, 28, 29 - 2015

(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

- நான்கு நாள்களுக்கு -

நேரம் : மாலை 6.45 மணி

(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)

இடம் : திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 021 222 2393

- திருமறைக் கலாமன்றம்



(9849)


## ஜனாதிபதியின்...



அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டு இராஜ தந்திரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் பீல்ட் மார்ஷல் தரத்துக்கு உயர்த்தப்பட்ட முதல் படைத் தளபதி சரத்பொன்சேகா. தெற்காசியப் பிராந்தியத்தில் பீல்ட் மார்ஷலாக தரம் உயர்த்தப்பட்ட நான்காவது படைத் தளபதி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் முன்னாள் படைத் தளபதிகளான சாம் மானெக்சா 1973 ஆம் ஆண்டிலும், கே.எம்.கரியப்பா 1983ஆம் ஆண்டிலும் பீல்ட் மார்ஷலாக தரம் உயர்த்தப்பட்டிருந்தனர்.

அதேபோன்று பாகிஸ்தானின் முன்னாள் படைத் தளபதி அயூப்கான் 1965 ஆம் ஆண்டு பீல்ட் மார்ஷலாக தரம் உயர்த்தப்பட்டிருந்தார். இவர்களையடுத்து, தெற்காசியாவின் நான்காவது பீல்ட் மார்ஷலாக ஜெனரல் சரத் பொன்சேகா தரம் உயர்த்தப்பட்டுள்ளார். இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது படைத்தளபதியாக ஜெனரல் சரத் பொன்சேகா இருந்தமை தெரிந்ததே. (செ)


## தேவை

உணவகமொன்றுக்குஅனைத்து வேலைகளும் செய்யத் தெரிந்த ஆண் ஒருவர் தேவை. (கொத்து ,தேநீர் தயாரித்தல், உணவு பரிமாறல்) அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:-0771258072 (9864)



# சேவை நலன் பாராட்டு



யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை அன்னையின் அரவணைப்புடனும் ஆசியுடனும் உயர்வான பணியாற்றி இன்றுடன் ஒய்வு பெறும்

## திரு. பொன். ஜெகானந்தராஜா

யாழ். இந்து ஆரம்ப பள்ளியென்னும்
அறனோங்கும் வித்தியாலயம்- வயனுறு
கல்விச் சாலையாக வளர்ந்திட வளம் சேர்த்த
வாண்மை கொண்ட வளவாளரே வாழி! வாழி!!

**சேவை விபரம்**

| | |
|---|---|
| இரத்தினபுரி/ நியூமாவல தோட்ட பாடசாலை- | 1976.03.01- 1977.06.23 |
| இரத்தினபுரி/ நியூமாவல அ.த.க.பாடசாலை- | 1977.06.24- 1980.03.05 |
| யா/ கோப்பாய் அரசினர் ஆசி.பயி.கலாசாலை- | 1980.03.06-1982.12.31 |
| இரத்தினபுரி/ திரியெல்ய அ.த.க.பாடசாலை- | 1983.01.01-1986.05.28 |
| இரத்தினபுரி/ மரத்தோட்டம் அ.த.க.பாடசாலை- | 1986.05.29-1987.06.30 |
| இரத்தினபுரி/ அல்மக்கியா முஸ்லிம் மகா வித்தி.- | 1987.07.01-1987.09.30 |
| யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை- | 1987.10.01- 23.03.2015 |

(ஜி-439)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.


## இந்...

ந்த ஜெயவீர தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் தலைமன்னார் முகாமிற்கு கடற்படையினரால் அழைத்து செல்லப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக -இலங்கை மீனவர்கள் இடையே மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தை சென்னையில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிலையில் இந்த கைது சம்பவம்நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)


## வேலைவாய்ப்பு

பிரபல நிறுவனமொன்றுக்கு O/L இல் சித்தியடைந்த ஆண், பெண் இருபாலாருக்குமான பணிநிலை வெற்றிடங்கள் உள்ளன. சிறந்த ஆளுமை, மொழிவளம், நிதிமுகாமைத்துவம், பேச்சுத்திறனில் திறமையுள்ளவர்கள் தேவை. வயதெல்லை (18–55) உங்கள் சுய விபரக் கோவையைக் கீழ்வரும் முகவரிக்கு 10 நாட்களுக்குள் அனுப்பவும்.

—முகாமையாளர்—

இல.10, புகையிரத நிலையவீதி, சாவகச்சேரி.

மேலதிக தொடர்புகளுக்கு :-0768602756 (9865)



## கிளிநொச்சியில் வேலைவாய்ப்பு

பல்நோக்கு நிறுவனமொன்றில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்புகள் உள்ளன. மொழிவளம், சிறந்த ஆளுமை, பொதுமக்கள் தொடர்பாடலில் தேர்ச்சிமிக்க செயல்திறன் உள்ளவர்கள் தேவை. உங்கள் சுய விபரக் கோவையை 05.04.2015க்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்

—பணிப்பாளர்—

No.57,2B, W.A Silvamawatha,
Wellawatte, Colombo-06

(9864)



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்

பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062

(C-428)



# வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

உங்கள் பெறுமதி மிக்க பொதிகளுக்கும் பணத்திற்கும்
100% உத்தரவாதம் எம்மிடம் மட்டுமே

## அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

இல.10, கஸ்தூரியார் வீதி, (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி)
யாழ்ப்பாணம். 021 222 3536

- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் ஏதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்

(C-438)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ... என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.